# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

அக்டோபர் 2025
இதழுடன் இணைப்பு


## பெண் உலகம்



பாட்டும்
பரதமும்

பாட்டும், பரதமும் பாரதப் பண்பாட்டின் சின்னங்கள்!

பாரெங்கும் அதை ஒளிவிடச் செய்வது பெண்கள்!

# Great tamil woman on Mahatma Gandhi's campaign!



Thillaiyadi Valliammai, a young South African Tamil girl, became an unlikely yet pivotal figure in the nonviolent struggle against apartheid in South Africa. Born on February 22, 1898, to an immigrant family from Thillaiyadi, Tamil Nadu, Valliammai grew up in a hostile environment where the Indian community was segregated and discriminated against. Despite her early life in South Africa, she remained unaware of the societal divide until her teenage years.

Her journey into activism began when a law was passed that rendered non-church or non-state-sanctioned marriages invalid, disproportionately affecting the Indian community. This legislation sparked opposition from Mohandas Karamchand Gandhi, and Valliammai, alongside her mother Mangalam, joined Gandhi's campaign, participating in a women's march from Transvaal to Natal in 1913. Despite the legal restrictions and dangers, they fought for the rights of Indian workers and protested the unjust tax laws.

In October 1913, Valliammai and her mother joined the second batch of women traveling to Natal, where they actively campaigned to persuade workers to strike and protest the oppressive taxes. After being sentenced to three months of hard labor and sent to Maritzburg prison, Valliammai fell ill but refused an early release. Her determination remained unwavering until her death on February 22, 1914, just days after being released from prison. Gandhi, deeply moved by her sacrifice, famously wrote, "Who would not love to die for one's motherland?"

Valliammai's legacy has been immortalized in both South Africa and India. In 1971, the Indian government established the Thillaiyadi Valliammai Memorial Hall, including a public library, in her honor. The village of Thillaiyadi also boasts a memorial and a high school named after her. Additionally, in 2008, India issued a commemorative stamp to honor her memory.

Valliammai's courage and selflessness have earned her a lasting place in history, not only as a heroine of South African Satyagraha but also as a symbol of the power of youth in the fight for justice and freedom.



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

# SAKI Trust on Chennai



SAKI is team of well educated Legal consultants, Educationist, Doctors, House wives and students.

SAKI has been initiated to educate and provide training programs for the women struggling because of poverty or/and because the husband abandoned the family or/and because the husband is a drunkard.

SAKI equips a woman with the skills and confidence necessary to secure a job, create a healthy lifestyle, and regain a "regain a home for themselves and their children".






செப்டம்பர் 7ஆம் தேதி SAKI டிரஸ்ட் மற்றும் ஆவடி மாநகராட்சி ரெட்டிபாளையம் பகுதி கூட்டமைப்பு (ALF) இணைந்து பெண்கள் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கூட்டமைப்பின் செயலாளரும் பெண் உலகம் மாத இதழின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சசிகலா செல்லமுத்து பங்கு பெற்றார்.




# முதல் வானிலை ஆய்வு மைய பெண் இயக்குனர்!

மழை நேரங்களில் தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் மழைக்கால தட்பவெட்ப நிலை மழையின் அளவு ஆகியவற்றை ஒருவர் அறிவித்ததை பார்த்திருக்கிறோம். டாக்டர் ரமணா அதன் பின்னர் பாலச்சந்திரன் என்று ஆண் இயக்குனர்கள் மட்டுமே வகித்து வந்த பதவியை முதல் முதலாக ஒரு பெண் இயக்குனராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது பெருமைக்குரிய விஷயம்.

டாக்டர் .அமுதா , தென் மண்டல வானிலை ஆய்வு மையத்தின் முதல் பெண் இயக்குனராக பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்திய வானிலை ஆய்வு மைய கட்டுப்பாட்டின்கீழ், நாடு முழுவதிலும் 7 மண்டல வானிலை ஆய்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தென்மண்டல வானிலை ஆய்வு மையம். இதன் கட்டுப்பாட்டில் தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளின் வானிலை முன்னறிவிப்புகளை மேற்கொள்கிறது.

டாக்டர் அமுதா கடந்த 1991ம் ஆண்டு பணியைத் துவங்கி, கடந்த 34 ஆண்டுகளாக இந்திய வானிலை மையத் துறையில் சிறப்பாக பணியாற்றி வருகிறார். வடகிழக்கு பருவமழை பற்றிய ஆய்வில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அமுதா, அத்துறையில் ‘டாக்டர்’ பட்டமும் பெற்றுள்ளார்.

தென்னிந்தியாவில் பருவமழை முன்னறிவிப்புகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய இவர், வடகிழக்கு பருவமழையின் போக்குகள் பற்றி பல்வேறு முக்கிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளார். டாக்டர் அமுதா இயக்குநராக பொறுப்பேற்பதற்கு முன்பே, வானிலை முன்னறிவிப்பில் செயற்கைகோள் படங்கள், ராடார் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பெருந்தரவு பகுப்பாய்வு போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வானிலை அறிவியல் பற்றி அனைவருக்கும் புரியும் வகையில், எளிமையாக எடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் சரியான முறையில் மக்கள் செயல்பட முடியும்!” என்பதை உறுதியாக நம்பும் டாக்டர் அமுதா எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்

*தகவல்: கமலா முரளி*



அன்பு தோழிகளுக்கு வணக்கம்!

எல்லோருடைய வீட்டிலும் நவராத்திரி கொலு வைத்திருப்பீர்கள். வரும் 2ந்தேதி நவராத்திரி முடிந்து விஜயதசமி நாளன்று புதிதாக பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பார்கள்.

விஜயதசமி என்றால், வெற்றி தருகிற நாள் என்று அர்த்தம். நவராத்திரியின் போது தான் துர்க்காதேவி மகிஷாசுரனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாளில் நவமியில் மகிஷாசுரனை வதம் செய்தாள். மறுநாள் தசமியில் தேவர்கள் அந்த வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடியதால், நாமும் அதை விஜயதசமி என்று கொண்டாடுகிறோம்.

பத்தாம் நாள் விஜயதசமி அன்று துவங்கப்படும் எந்தக் காரியமும் மிக வெற்றிகரமாக அமையும். அன்றுதான் குழந்தைகளுக்கு வித்யா உபதேசம் எனும் கல்வி கற்கத் தொடங்கும் அற்புதமான நாளாக கொண்டாடுவார்கள்.

சிறு குழந்தைகளுக்கு விஜயதசமி நன்னாளில், ஆரம்பக் கல்வியை தொடங்கினால், அவர்கள் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்பது ஐதீகம். சரஸ்வதி பூஜை அன்று அடுக்கி வைத்த புத்தகங்களை மீண்டும் விஜயதசமி அன்று பூஜித்து நைவேத்தியத்துடன், ஆரத்தி காட்டி அன்று சிலவரிகளாவது படித்தால் கல்வி மேலும் அபிவிருத்தி அடையும் என்பது நம்பிக்கை.

அதே நாள் தொழில் முனைவோர் தங்கள் கணக்கை அன்று ஆரம்பித்து புதிதாக தொடங்குவார்கள். அனைவருக்கும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறோம்.

சுஜாதா மூர்த்தி
நிர்வாக ஆசிரியர்


# பெண் உலகம்

அக்டோபர் 2025 இணைப்பிதழ்

ஆசிரியர்/ வெளியீட்டாளர்:
எம்.எஸ்.மூர்த்தி

நிர்வாக ஆசிரியர்:
சுஜாதா மூர்த்தி

சிறப்பு ஆலோசகர்:
மணவூர்.கி. விடாரண்யம்



**ஆசிரியர் குழு**

சென்னை
செல்வி.S.ஸ்ருதிலட்சுமி B.Sc.(Psychology)
செல்வி.ஷி.ஜானகி
திருமதி.உமா ஸ்கந்தவேள் (கவிஞர்)

கோவை மண்டலம்:
திருமதி.ராஜ்மேம்(கல்வியாளர்)
திருமதி.சுமதி ரகுநாதன் (எழுத்தாளர்)

கிருஷ்ணகிரி
திருமதி ருக்மணி தேவி (ஆசிரியர்)

கடலூர்
கவிஞர்.பா.தேசபிரியா
கவிஞர் வெண்ணிலா பாலாஜி

புதுவை
கவிஞர்.உமா இராமச்சந்திரன்

திருவாரூர்
செல்வி.நறுமுகை

திருவண்ணாமலை
பா.விண்ணரசி வேளாங்கண்ணி (ஆசிரியர்)

திருவள்ளூர்:
திருமதி சசிகலா செல்லமுத்து(மகளிர் சுய உதவி குழு)

சிவகங்கை
எஸ். தனலட்சுமி(யோகா ஆசிரியர்)

வடிவமைப்பு:
திருமதி.சுமதி மணிகண்டன்

# கனவு தேசம்

பல வருடங்களாக கோபால்தான் அவர்கள் வீட்டையும், குழந்தையையும் கவனித்துக் கொள்கிறான்.

நான்கு நாட்கள் கழித்து மித்ராவைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தபோது மறக்காமல் திரும்பவும் அவளிடம் இது பற்றிக் கேட்டேன்.

அவளும், ஒரு வழியாக நாளை கிளம்புவதாக முடிவெடுத்து விட்டோம் , ஆனால் 15 நாள் ட்ரிப் தான் என்றாள்.

எந்த இடம் என்று கேட்க ஆரம்பிப்பதற்குள், மித்ரா ஆதரவாக என் தோளைப் பற்றி அதை மட்டும் கேட்க வேண்டாம் என்றும் தன் கணவரிடம் இந்த ரகசியத்தைக் காப்பாற்றப் போவதாக சவால் விட்டிருப்பதையும் கூறினாள். 10,000 ரூபாய் பந்தயம் என்றாள் அவள்.

நானும் அவளிடம் மேற்கொண்டு அதைப் பற்றிக் கேட்காமல், அவளே பந்தயத்தில் செயிக்க வேண்டுமென வாழ்த்தினேன்.

மித்ராவும், “ரித்தி இன்று அந்தமான், கிளம்பி விட்டாள். அவள் வருவதற்கு 20நாட்கள் ஆகும். அதற்குள் நாங்கள் திரும்பி விடுவோம். கோபால் தன் கிராமத்திற்குப் போய்வர விரும்புகிறான். அவனும் நாளைக்குச் சென்றுவிட்டு நாங்கள் வருவதற்குள் திரும்பிவிடுவான் . உங்களிடம்தான் சாவியை கொடுத்துச் செல்லப் போகிறோம் என்றாள்.

நானும் ‘ஓ, யெஸ், கட்டாயம் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாமல் போய் வாருங்கள்’ என்றேன்.

அவளும் ஒவ்வொரு முறை ஊருக்குப் போகும் போதும் உங்களுக்குத்தான் தொந்திரவு கொடுக்கிறோம் என்று பார்மலாக சொன்னாள்.

நானும் அதெல்லாம் ஒன்றுமில்லை என்று சமாதானம் சொல்லிவிட்டேன். அவளும் பந்தயத்தில் ஜெயித்த பணத்தில் நான் உனக்கு ஏதாவது நல்ல பரிசாக வாங்கி வருகிறேன் , என்றாள் சிரித்துக் கொண்டே.

அடுத்த நாள் சந்திரு கேட் மற்றும் வீட்டுக் கதவு ஆகிய 2 சாவிகளையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றார்.நானும் அதை வாங்கி பத்திரமாக டிராயரில் போட்டு வைத்தேன்.

அடுத்த சில நாட்கள் அமைதியாகக் கழிந்தது. ஒரு நாள், மாலை என் கணவர் தன் அலுவலகத்திலிருந்து வரும் பொழுது, மித்ரா வீட்டு மாடி சன்னல் வழியாக பளிச்சென்ற ஒளி வீசியதாகக் கூறினார்.

இதைக் கேட்டவுடன், ஐயோ, ஒரு வேளை திருடனாக இருக்குமோ என்று மனது படபடப்பானது. சென்ற முறை அவர்கள் மலேசியா சென்றிருந்தபோது கூட மாடியில் ஒரு பல்ப் எறிய விட்டுத்தான் சென்றார்கள். அது போல இந்த முறையும் செய்திருக்கலாம் என்றேன். அவரும் அப்படித்தான் இருக்கும் என்று சொல்லி விட்டுவிட்டார்.

அடுத்த ஆபிஸில் இருந்து வரும போதே மிகவும் பரபரப்பாக வந்தார். இன்று அவர்கள் வீட்டு மாடியில் லைட் எரியவில்லை என்றார் ஆச்சரியமாக. நேற்று எரிந்து கொண்டிருந்த லைட் இன்று எப்படி எரியாமல் இருக்கும் என்ற சந்தேகத்தையும் கிளப்பினார்.

உடனே என் மகன் அரவிந்த் ஒரு வேளை பல்ப் பியூஸ் போய் இருக்கலாம் என்றான்.

என் மகள் கீர்த்தியோ, ‘ அப்பா, நீங்க தெரு விளக்கு வெளிச்சம் அவர்கள் வீட்டு கண்ணாடியில் பட்ட பிரதி பிம்பத்தைத்தான் பார்த்திருப்பீர்கள். சரியாககவனிக்காமல்சொல்லிவிட்டீர்கள்’, என்றாள்.

ஒரு வேளை தெருவில் கடந்து போகும் காரின் ஹெட்லைட் வெளிச்சம் கூட அதில் பட்டிருக்கலாம் என்று எண்ணிப் பார்த்தபோது அது சரியாக இருப்பது போல் தோன்றியது. எதற்கும் இருக்கட்டும் என்று அவர்கள் வீட்டு கேட் பூட்டு ஒழுங்காக பூட்டப்பட்டுள்ளதா என்பதையும் சரிபார்த்து விட்டார் என்னவர். அடுத்த 2 நாட்கள் அமைதியாகக் கழிந்தது.

இருந்தாலும் என் கணவருக்கு மட்டும் மனதில் ஏதோ உறுத்தல் இருந்து கொண்டே யிருந்தது. எதற்கும் உள்ளே போய் ஒரு முறை சோதித்துப் பார்த்து விட்டு வந்து விடலாம் என்று கேட்க ஆரம்பித்தார். அவர்கள் வீடு முழுவதும் மிக உயர்ந்த பொருட்கள் நிறைய வைத்திருப்பதால், திருடன் வருவதற்கும் வாய்ப்புள்ளதே என்று சந்தேகம் வேறு கிளப்பி விட்டு விட்டார்.

ஐயோ திருடன் இருப்பது போல்

இருந்தால் நாம் தனியாக செல்வது ஆபத்தாகுமே என்றேன் பதட்டத்துடன்.

அவரும், ‘ வேறென்ன செய்வது, நீதானே, நாங்கள் வீட்டைப் பார்த்துக் கொள்கிறோம் ‘ என்று ஒத்துக் கொண்டாய்”, என்றார்.



இருந்தாலும் அந்த இரவு வேளையில் போய் வீட்டை திறந்து பார்க்கும் அளவிற்கு தைரியம் வரவில்லை. திருடனாக இருந்தாலும் இந்நேரம் வேண்டுவதெல்லாம் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டியிருப்பான். எதுவாக இருந்தாலும், அடுத்த வீட்டுக்காரர் என்பதற்காக நம் உயிரை பணயம் வைத்து, இந்த இரவு நேரத்தில் போக வேண்டாம், காலையில் போய் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்.

ஆனால் பிள்ளைகளோ, போலீசில் தகவல் கொடுத்துவிடலாம் என்று கட்டாயப் படுத்தினர்.

என் கணவரோ இது போல சின்ன சந்தேகங்களுக்கெல்லாம் போலீசை வரவழைக்க முடியாது. அவர்கள் தொந்தரவு பெரிதாகிவிடும் என்றார் யோசனையுடன்.

சரி, எது எப்படியோ நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து படுக்கச் சென்றோம். நிம்மதியான உறக்கம் இல்லைதான், ஆனாலும் வேறு வழி தெரியவில்லை.

அடுத்த நாள் அவர் அவசரமாக வெளியே கிளம்பியவுடன், நான் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு மித்ரா வீட்டிற்குச் சென்றேன். இரும்பு கேட் கிரீச் என்ற சத்தத்துடன் திறந்ததைத் தவிர வேறெந்த மாற்றமும் இல்லாமல் இயல்பாகவே இருந்தது.

அரவிந்த் காலிங் பெல்லை விடாமல் அடித்தான். உள்ளே பெல் அடிக்கும் சத்தம் வெளியே கேட்டது. கீர்த்தியோ, ஏண்டா திருடன் வந்து கதவைத் திறப்பானோ என்று கிண்டல் பண்ணிக் கொண்டிருந்தாள்.

அவனும், சீ, போடி, என்று அவள் சடையைப்பிடித்துஇழுக்கஇரண்டுபேரும் சண்டை போட ஆரம்பித்துவிட்டார்கள். இருவரையும் மிரட்டி அடக்கி விட்டு, கதவை திறந்து உள்ளே போய் பார்ப்பதா வேண்டாமா என்று ஒரே குழப்பமாக இருந்தது. ஆனால் குழந்தைகள் ஏகமனதாக திறந்து பார்த்துவிடுவது என்று முடிவெடுத்தனர். பட்டபகலில் என்னதான் நடந்து விடப் போகிறது என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வீட்டைத் திறக்க முடிவெடுத்து விட்டோம்.

2, 3 நாட்களாக மழை பெய்து கொண்டிருந்ததனால், புல் வெளியில் நடக்கும் போதே சிலீரென குளிராக இருந்தது. நனைந்த மனோரஞ்சிதம் கபடமில்லாமல் மணம் பரப்பிக் கொண்டிருந்தது.

‘அட ஆண்ட்டி சேரை உள்ளே எடுத்து வைக்க மறந்துவிட்டார்கள் என்றாள் கீர்த்தி., அங்கிருந்த இரு பிரம்பு நாற்காலிகளைக் காட்டி. அவள் காட்டிய திசையில் நான் கண்ட காட்சி மேலும் அதிர்ச்சியைக் கூட்டியது. அங்கிருந்த டேபிளில் இரு காக்கைகள் எதையோ கொத்தித் தின்று கொண்டிருந்தது. யாரோ சமீபத்தில் அந்த டேபிளில் அமர்ந்து எதையோ சாப்பிட்டிருக்கிறார்கள் என்பதையே அது உறுதி செய்தது. மித்ரா குடும்பம் ஊருக்குச் சென்று வாரம் ஒன்றாகிறது. ஒரு வேளை திருடனின் வேலையாக இருக்குமோ என்ற சந்தேகம் அச்சமூட்டியது. இனிமேல் அங்கிருப்பதோ, உள்ளே செல்வதோ சரியாக இருக்காது என்று திரும்பி போய் விடலாம், முதலில் போலீசுக்கு தகவல் சொல்லலாம் என்று கூறினேன்.

அரவிந்தோ வந்ததே வந்துவிட்டோம், கொஞ்ச நேரமாவது ஊஞ்சல் ஆடிவிட்டுத்தான் வருவேன் என்று அடம் பிடித்தான். அவனை வேண்டாம் போகலாம் என இழுத்து வருவதற்குள், கீர்த்தி ஓடிவந்து, வீட்டிற்குள் இருந்து அப்பம் வாசனை கமகமவென வருவதாகக் கூறினாள்.

‘ என்னடி சொல்கிறாய். பூட்டிய வீட்டிற்குள் இருந்து எப்படி அப்பம் வாசம் வரும், பக்கத்திலும் வீடு ஏதும் இல்லை ‘, என்றேன்.

அரவிந்தோ, திருடந்தான் உள்ளே அப்பம் சுட்டு சாப்பிடுகிறான் என்றான் கிண்டலாக. நானும், அப்பா கூட இல்லாமல் தனியாக இங்கே இருப்பது சரியல்ல என்று அவர்களை கிளம்பலாம்

என்று கூப்பிட்டேன்.

அப்பம் வாசனை காற்றிலே மிதந்து வந்து என் மூக்கையும் நிறைத்தது. கீர்த்தி, அம்மா சன்னல் ஒன்று லேசாக திறந்திருக்கிறது நான் போய் அதன் வழியாக பார்க்கிறேன் என்று ஓடினாள், அம்மா வேண்டாம் என்று கத்துவதையும் பொருட்படுத்தாது, காம்பவுண்டு மேல் ஏற முயற்சித்தாள்.

எனக்கு பயத்தில் கை,கால் எல்லாம் வெடவெடத்தது. கொடியில் உலர்த்தப்பட்டிருந்த கருப்பு உள்பாவாடை மற்றும் தோட்டத்தில் இருந்த காலடித் தடங்கள் இவையனைத்தும் மேலும் அச்சத்தை உண்டாக்கியது.

கீர்த்தி, வந்துவிடு போயிடலாம், என்றேன் ஈனஸ்வரத்தில்.

சுவர் மிகவும் உயரமாக இருந்ததால் எனக்கு ஏறுவது சிரமம் என்று முன்னால் சென்று கதவைத் திறக்கலாம் என்று ஓடினேன். கீர்த்தியை தனியாக உள்ளே செல்லவிடுவதைவிட எது நடந்தாலும் பரவாயில்லை என வீட்டைத் திறந்துவிடுவது என்ற முடிவிற்கே வந்துவிட்டேன்.

அரவிந்த் அம்மா என்று ஓடி வரவும், இரு பார்க்கலாம் என, கதவின் துவாரத்தில் சாவியை நுழைப்பதற்காக முயன்ற போது, அடுத்த அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. ஆம் கதவு உட்புறமாக தாள் திறக்கப்பட்டு படாரென திறந்தது.

ஒரு குரல், ‘ஹலோ மாலா, இன்ப அதிர்ச்சியாக இருக்கிறதே, வா உள்ளே ‘ என்றது.

அங்கே, மித்ரா, ஒரு வெளுத்துப் போன நைட்டியுடன், மேக் அப் இல்லாத எளிய தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவள் பின்னே, பர்மூடாசுடன், ஷேவிங் செய்யாத முகத்துடன், அவள் கணவன் சந்திரு. அவர்கள் இருவரையும் ஆச்சரியமாக கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறாள் கீர்த்தி.

ஒரு வினாடி என் கண்களையே நம்ப முடியாதவளாக பின்னால் நகர யத்தனித்த போது, மித்ரா ஆதரவுடன் என் கைகளைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

சந்திரு, ’மேடம் உங்களுக்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருக்கும் என்பது புரிகிறது. உள்ளே வந்து உட்காருங்கள் முதலில்’ , என்றான்.

மித்ரா, என்னை அணைத்தபடி ‘ சாரி மாலா, இதுதான் என்னுடைய விருப்பமான கனவு தேசம், அமைதியான விடுமுறை’ என்றாள்.

‘அட, என்ன சொல்கிறாய், நீங்கள் எங்கேயுமே போகவே இல்லையா?’ என்றேன் மேலும் ஆச்சரியமாக.

‘ஆமாம்,10 நாட்களாக இதே வீட்டிற்குள், நிம்மதியாக அமைதியாக விடுமுறையை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நினைத்ததை உடுத்திக் கொண்டு, விரும்பிய பாட்டை கேட்டுக் கொண்டு, ஆசைப்பட்டதெல்லாம் சமைத்து சாப்பிட்டுக் கொண்டு, நிறைய புத்தகம் படித்துக் கொண்டு, வாவ்........ரியலி ஃபெண்டாஸ்டிக் ஹாலிடே ‘! என்றாள் சிலிர்த்துக் கொண்டே.

ஓ, இன்றைய ஸ்பெசல் அப்பமா என்றேன் சிரித்துக் கொண்டே.

‘ஆம், 15 நாட்களுக்குத் தேவையான பழங்கள், காய்கறிகள், இன்ஸ்டண்ட் ஐட்டம்ஸ் எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டோம். எங்கள் வீட்டின் மொத்த சந்தோசமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.’ என்றான் சந்திரு.

மித்ரா முகத்தில் முன்னெப்போதும் இல்லாத வெட்கம் கலந்த அந்த மகிழ்ச்சி மிகவும் புதுமையாக இருந்தது.

‘எங்களுடைய தேனீ போன்ற வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் பலவகையில் தொலைத்திருக்கிறோம்’, என்றாள் நீண்ட பெருமூச்சுடன்.

‘ஆனால் எங்களுடைய உண்மையான சந்தோசத்தையும், புரிதலையும் எங்களுடைய இந்த வீட்டுச் சொர்கத்திலேயே கண்டுபிடித்து விட்டோம்’ என்று சந்திரு ஏக்கம் கலந்த பெருமூச்சுடன் கூறினான்.

அதிக நேரம் அங்கிருந்து அவர்களின் நிம்மதியை கெடுக்க விரும்பாமல் குழந்தைகளை கூட்டிக் கொண்டு கிளம்பப் போனேன். மித்ரா அதற்குள் சுடச்சுட அப்பத்துடன் வந்தாள். அதையும் சாப்பிட்டுவிட்டு, மகிழ்ச்சியாகக் கிளம்பினோம், இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற முடிவுடன்.......



தி.பவள சங்கரி
எழுத்தாளர்

# Teachers
# The Silent Architects of Tomorrow

Teachers' Day is more than a date on the calendar. It is a moment of reflection and gratitude, a time to acknowledge the incredible influence of those who dedicate their lives to education. Teachers are not just professionals who deliver lessons in classrooms. They are mentors, guides, and role models who shape the minds and values of the next generation.

A teacher's role extends far beyond textbooks and exams. In today's complex and fast-paced world, education is not confined to academic performance alone. Teachers are holistic educators.

They nurture critical thinking, emotional intelligence, creativity, and resilience. They prepare students not only to succeed in their careers, but also to thrive in life. True education means building character, confidence, and compassion, and teachers are at the heart of that transformation.

From the earliest stages of childhood to higher education and beyond, teachers help us discover who we are and what we are capable of becoming. They rec-



ognize potential before we see it in ourselves. With patience and persistence, they guide students through challenges, encouraging them to grow from failure and believe in their abilities. Teachers provide a safe space for questioning, exploration, and discovery.

The impact of a great teacher often goes far beyond the classroom. Many of us carry the lessons of a teacher throughout our lives. Their words of encouragement echo in our minds during moments of doubt. Their discipline shapes our work ethic, and their values influence the way we treat others. A teacher's influence is lasting and profound, even if it is not always immediately visible.

What makes teachers extraordinary is their ability to connect with each student as an individual. They are not only educators but also leaders, friends, and companions. They listen without judgment and guide without imposing. They inspire through action, often becoming silent role models for how to live, lead, and serve.

As we face global challenges and rapid changes in technology, the need for strong, compassionate educators has never been greater. Teachers are the ones who prepare future leaders to think critically, act ethically, and lead responsibly. They do not just equip students with knowledge; they instil the wisdom to use it for the greater good.

On this Teachers' Day, we salute the dedication, humility, and passion that educators bring to their work. Their efforts often go unnoticed, but their impact is immeasurable. To every teacher who has sparked curiosity, lifted a spirit, or changed a life — thank you. Your contribution to society cannot be measured by grades or scores but by the generations of thoughtful, empowered individuals you help shape.

Let us not just celebrate teachers today. Let us value and support them every day, for they are truly the silent architects of tomorrow.

To all teachers, thank you.

For your wisdom, your patience, and your unwavering belief in the potential of others.



Sudharshini.S.K
B.E(EEE), Big data Analyst, TEFL, TESOL, BET
Advisory Teacher, Academic advisor and
Spoken English Trainer, Vellakoil

# சோம்பலை நீக்கி சுறுசுறுப்பாக்கும் உஷ்ட்ராசனம்

உஷ்ட்ராசனம்

அமர்ந்த நிலை ஆசனங்களின் வரிசையில் இரண்டாவது ஆசனமாக உஷ்ட்ராசனத்தை ஸ்வார்த்தம் சத்சங்கம் அறிவிக்கிறது.

முதுகு தண்டுக்கு வலிமை தரும் உஷ்ட்ராசனம்.

கூன் விழுந்த முதுகுடன் இருப்பவர்கள் முதுகை சீராக்க உஷ்ட்ராசனம் உதவுகிறது. இப்போது இந்த ஆசனத்தை எப்படி செய்வது என்று விரிவாக பார்க்கலாம்.

உஷ்ட்ரம் என்றால் ஒட்டகம். இந்த ஆசனத்தை செய்யும் போது ஒட்டகத்தைப் போன்று தோற்றம் தருவதால் இதற்கு உஷ்ட்ராசனம் என்று பெயர்.

ஆண், பெண் பாகுபாடின்றி வயது பாகுபாடின்றி இளையோர் முதல் பெரியோர் வரை அவர்களது உடல் அமைப்பிற்கும் ஏற்றவாறு இவ்வாசனத்தை செய்யலாம்.

மலசலம் கழித்த பின்னரே இதை செய்ய வேண்டும். உணவு உண்டபின் ஆசனம் செய்யலாகாது. இவ்வாசனம் செய்யும் போது உடலில் வலி ஏற்பட்டால் ஆசனம் செய்வதை நிறுத்தி விட வேண்டும். எந்த ஒரு உறுப்பும் இறுக்கம் இன்றி தசைகள் தளர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

மனம் : இடுப்புப் பகுதி மற்றும் கழுத்து.

மூச்சின் கவனம் :

வளையும்போது வெளி மூச்சு, நிமிரும் போது உள்மூச்சு

செய்முறை :

முதலில் தரையில் முட்டி போட்டு நிற்கவும். அதாவது முழங்கால்களும் கணுக்கால்களும் தரையில் படுமாறு நிற்கவும். இரு பாதங்களும் மேல்நோக்கி இருக்க வேண்டும்.

இரு பாதங்களையும் ஒன்றோடொன்று சேர்த்து வைக்கவும். மெதுவாக மூச்சை ஆழ்ந்து உள்ளிழுத்துக் கொண்டே பின்பக்கமாக சாய வேண்டும். இடது உள்ளங்கையை இடது கால் பாதத்திலும் வலது உள்ளங்கையை வலது கால் பாதத்திலும் வைக்கவும்.

முதுகை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நன்றாக வளைக்கவும். தலையை பின்பக்கமாக தொங்கவிட வேண்டும். தலையின் உச்சிப்பகுதி தரையை பார்த்தபடி இருத்தல் சிறப்பானது. தொடைப்பகுதி உள்பக்கமாக சாய்ந்திருக்கக் கூடாது. தரைக்கு செங்குத்தாக இருக்க வேண்டும். இந்த நிலையில் சுமார் 30 நிநாடிகள் இருந்த பின் சாதாரண நிலையில் மூச்சு விடவும். பிறகு கைகளை ஒவ்வொன்றாக மேலே எடுத்து இயல்பு நிலைக்கு திரும்பவும்.

பயிற்சியின் போது வாயினால் மூச்சு விடக்கூடாது. உடல் குறுகுதலை தவிர்க்க வேண்டும். ஆடைகள் தளர்ச்சியாக இருத்தல் நல்லது. ஆசனம் நிதானமாகவும் மெதுவாகவும் படிப்படியாகவும் செய்ய வேண்டும். இவ்வாசனம் செய்ய காலை 4 மணி முதல் 6 மணி வரை செய்யலாம்.






**மாநில அளவில் நடைபெற்ற யோகா போட்டியில் சிவகங்கை திருமதி. தனலட்சுமி அவர்களிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள்.**

பயன்கள்

இவ்வாசனம் முதுகு தண்டை உறுதி செய்வதில் மிக முக்கியமானதாகும். எளிதில் உணவுகளை ஜீரணிக்க செய்கிறது. குடல் இறக்கத்தை சரிசெய்து உணவு செரிமானத்தை சீராக்குகிறது. கூன் விழுந்த முதுகுடன் இருப்பவர்கள் முதுகை சீராக்க உஷ்ட்ராசனம் உதவுகிறது. கணையத்தின் சுரப்பு தன்மையை சீராக்குகிறது.

தோள் மூட்டுகளில் உள்ள குறைகளை தீர்க்க உதவுகிறது. கண்களின் பார்வை திறனை அதிகரிக்க செய்கிறது. இதயத்தை வன்மையடையச் செய்து இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. கழுத்துபகுதி தசைகளை வலுப்படுத்துகிறது. மார்பு பகுதியை விரிவடையச் செய்து மார்பு தசைகளை வன்மையடையச் செய்கிறது. சிறுநீரக பிரச்சனைகளை சீர் செய்கிறது.

நரம்பு தளர்ச்சியை நீக்கி புத்துணர்வு அளிக்கிறது. ஞாபக சக்தி, மன ஒருமைப்பாடு இவற்றை அதிகரிக்கிறது.

உடல் ரீதியான பலன்கள்

முதுகுத் தண்டின் வளையும் தன்மையும் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டமும் அதிகரிக்கின்றது. வயிற்றின் உள்ளுறுப்புகள் பலமடைந்து விலா எலும்புகள் நன்கு விரிவடைகின்றன.

குணமாகும் நோய்கள்

முதுகுவலி, சுவாசக் கோளாறுகள், முழங்கால் வலி, இடுப்பு வலி, இடுப்பு வாயு பிடிப்பு , கீழ் வாயுக் கோளாறு, இரைப்பைகோளாறுகள், முதலியவற்றிற்கு நல்லது . தன்னம்பிக்கையை வளர்க்கிறது. சோம்பலை நீக்கி பயிற்சியாளரைச் சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது..

எச்சரிக்கை

இதய நோயாளிகள், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், முதுகுதண்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் கர்ப்பிணி பெண்கள் ஆகியோர் இவ்வாசனத்தை செய்யக்கூடாது.

இதய நோயுள்ளவர்கள் கவனமாகச் செய்யவும். குடல் வால்வு நோய் உள்ளவர்கள் இதைச் செய்தல் கூடாது.

இதனை செய்வதற்கு ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும், செய்யத் தொடங்கிவிட்டீர்களேயானால், உங்கள் வயிற்றில் இருக்கும் தொப்பை குறைந்து, உடலை வில் போன்று வளைக்கக் கொடிய நெகிழ்வுத் தன்மை வந்துவிடும்.

தோள்பட்டைகள் விரிந்து, குறுகிய எலும்புக் கூடுகள் பலமடைந்து, கூன் முதுகு போய் கம்பீர தோற்றம் கிடைக்கும்.

**S.Dhanalaxmi,**
**Yoga Terapist & Naturopathy,**
**Sivagangai.**

# தொல்காப்பியமும் நன்னூலும்

## கல்வி

தமிழர்கள் பிறப்பின் வழியோ பொருளியல் அடிப்படையிலோ ஏற்றத்தாழ்வு பார்த்தவர்கள் அல்லர். குலப்பிரிப்புகளும் சில குலங்கள் ஒடுக்கப்படுவதும் பழந்தமிழர் வழக்கில் இல்லை. செய்யும் தொழிலின் அடிப்படையில் வழங்கப்பட்டாலும் அனைவரும் பிறப்பால் ஒன்றே கருதினர். அவ்வழியில்தான் கல்வியும் கற்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் அயலார் நுழைவினால் ஏற்றத்தாழ்வுகள் தோன்றின. அவை அப்படியே தீவிரமடைந்து சாதியக் கொடுமைகளைத் தோற்றுவித்தன.

ஆரியச் சூழ்ச்சியில் சொல்லப்பட்டவை யாவும் இப்படித் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையே.. அடிமைத் தொழில் செய்யப் பிறந்தவர்களே சூத்திரர்கள் ; சூத்திரர்கள் கல்வி கற்றால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் போன்ற வன்மகளை ஆரிய மனுநூல் சொல்கிறது. இது விசயநகர ஆட்சியில் மேலும் தீவிரமடைந்தது. இதன் தொடர்ச்சியாகவே தீண்டாமை இழிவு தமிழன் தலைமையில் சுமத்தப்பட்டது.

சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டது போக, பொருளியல் காரணமாக ஒடுக்கப்படுவது இன்றைய நிலையில் கண்கூடு. கல்வி விலைபொருள் ஆகிவிட்டது. வறியோருக்குத் தரமான கல்வி கிடைப்பதில்லை. பழந்தமிழகத்தில் அரசர், அந்தண,ர் வணிகர், வேளாளர் என்ற அடுக்கு முறையில் நான்காம் நிலையில் உள்ள ஒருவன் கல்வி கற்றால் முதல் நிலையில் உள்ளவனுக்குச் சமமாவான் என்கிறது புறநானூறு.



உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,

பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!

பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,

சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,

மூத்தோன் வருக என்னாது, அவருள்

அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

(புறம் 183)

மேற்காண் பாடலில், ஒரு வயிற்றுப் பிறந்தவருள்ளும், அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுபவளாவள். ஒரு குடிவந்த பலருள்ளும்,மூத்தோனை வருக என்று அழையாது,அறிவுடையோனையே வருகஎன்று அரசனும் சென்று கேட்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும், கீழ்நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லான் ஆயின், மேல்நிலையிலுள்ளவனும் அவனுக்கு ஆட்படுவான். இதனால் ஊறுபாடு நேர்ந்தவிடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் நேரும் இழப்பு வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாதும், முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். அதனால், சிறப்பும் அறிவும் நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயரலாம் (புலியூர்க் கேசிகன் உரை) என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்விச் சிறப்புகளைக் கூறுகிறார்.

தமிழில் சொல்லப்பட்ட அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற பகுப்புகளில் கற்றவனை உயர்ந்தோனாகப் போற்றுவர் என்ற செய்தி புலனாகிறது.

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன

(தொல் பொருள். அகம் 28)

என்ற தொல்காப்பிய நூற்பாவில் உரையாசிரியர்கள் உயர்ந்தோர் என்பவரைச் செல்வம் படைத்தோர், உயர்குலத்தோர் என்கின்றனர். உயர்ந்தோர் என்பது செல்வம் படைத்தவரைக் குறிப்பிடுவது அன்று. உயர்பண்பு உடையவரையே. உயர்பண்பு வினையால் அணைந்த பெயரே உயர்ந்தோர் என்பதாகும்.

ஐந்திணையின் கருப்பொருட்களை நம்பியகப்பொருள்,

ஆரணங் குயர்ந்தோர் அல்லோர் புள்விலங்

கூர்நீர் பூமர முணாப்பறை யாழ்பண்

டொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.

என்ற நூற்பாவில் பட்டியலிடுகிறது. இதில் மக்களை உயர்ந்தவர்தாழ்ந்தவர் என்று குறிப்பிடப்படுகின்றார் நூலாசிரியர் நாற்கவிராச நம்பி.

தொல்காப்பியம் கருப்பொருளைப் பற்றிச் சொல்லுகையில்,

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப

(தொல்.பொருள்.அகம்.20)

மேற்கண்டபடி உயர்ந்தோர் தாழ்ந்தோராகப் பிளவுபடுத்திக் காட்டவில்லை. இப்படி இருக்க தொல்காப்பியர் ஓதலை உயர்ந்தவர்க்கு உரியதாகச் சொல்லியது பண்பின் அடிப்படையில் பார்க்கப்பட்டதே. சங்ககாலத்தில் சாதியப் பிரிவினை இல்லை. செய்யும் தொழிலின் அடிப்படையிலான பகுப்புகளே இருந்தன. அவற்றிலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை.

நன்னூல் பாயிரவியலில் மாணாக்கர் ஆதற்குரியோர், மாணாக்கர் ஆகாதோர் பற்றிய இலக்கணம் சொல்லப்படுகிறது.

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்

பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே

உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே

(நன்னூல்.எழுத்து. 37)

இந்நூற்பாவில் தன்னுடைய மகன், தன் ஆசிரியரின் மகன், மன்னனின் மகன், பொருளை அதிகம் கொடுக்கும் செல்வந்தன், தன்னை வணங்கி வழிபடுபவன், தான் உரைப்பனவற்றை எளிதில் புரிந்து கொள்பவன் ஆகியோரே மாணாக்கர் ஆவதற்கு உரியவர்கள் என்று நன்னூலார் கூறுகிறார்.

"களிமடி மானி காமி கள்வன்

பிணியன் ஏழை பிணக்கண் சினத்தன்

துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்

தடுமா றுளத்தன் தறுகணன் பாவி

படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே.

(நன்னூல்.எழுத்து.39)

இங்கே கள்ளுண்டவன், சோம்பேறி, தன்னையே பெருமையாக எண்ணிக் கொள்பவன், பேராசைக்காரன், திருடன், நோயுற்றவன், ஏழை, அடிக்கடி குணம் மாறுபடுபவன், சினம் கொள்பவன், அதிகம் உறங்குபவன், அறிவு இல்லாதவன், நூல்களைக் கற்க அஞ்சுபவன் ஆகியோரை மாணாக்கராகத் தகுதியற்றோர் என்கிறார்.

இவ்விரு சூத்திரங்களிலும் மாணாக்கர் ஆகத் தகுதியுடையோனாகப் பொருள் மிகக் கொடுக்கும் செல்வந்தனையும், தகுதியற்றோனாக ஏழையையும் குறிப்பிடுகிறார்.

பொருள் அதிகம் கொடுப்பவனை மாணவன் என்ற தகுதிக்கு உயர்த்துதலும் ஏழையை மாணவன் ஆகத் தகுதியற்றவனாய்க் காண்பிப்பதும் நன்னூலாரின் அறத்தடுமாற்றத்தையே காட்டுகின்றன.

சு.நறுமுகை

# பெண்மை



மண்ணின் வாசம் போல
மென்மையும்வன்மையுமாய் கலந்தது தான்–
பெண்மை!!!

கண்ணீர் வழியும் நேரத்திலும்
புன்னகையை மறக்காத
துணிவு அது...!!!

தாயாக, சகோதரியாக,
தோழியாக, காதலியாக,
சமூகத்தின் ஒவ்வொரு முகத்திலும்
தன்னையே கரைத்து வாழும்
ஒளி அது...!!!

புயலின் மையத்தில் நின்று
காற்றை எதிர்த்து பேசிடும்
சத்தம் அது...!!!

காயங்கள் பல இருந்தாலும்
மீண்டும் மீண்டெழும்
அசைக்க முடியாத
மனம் அது...!!!

மௌனத்தில் கூட அர்த்தம் தரும்
மொழி அது...!!!

முடிக்கப்படாத கனவுகளை
தன் இதயத்தில் விதையாக
வைத்திருக்கும்
நிலம் அது...!!!

நம்பிக்கையின் வெண்மேகம் போல
தூர பறக்கும் கனவுகளைக் காக்கும்
கரம் அது...!!!

விழிகள் சொல்லும் அன்பும்,
முடிவெடுக்கும் தெளிவும்,
உண்மைக்கு துணை நிற்கும் நேர்மையும்–
இவையனைத்தும் சேர்ந்து உருவான
ஓர் அதிசயமே...
பெண்மை!!!

*உமா ஸ்கந்தவேள்*

# சுடர் விடும் தமிழ்

கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் தோன்றி

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மூதோரின்

ஆக்கங்கள் பங்கமின்றி காத்திருந்தால் வயதென்னயிருக்கும்

எம் கன்னித்தமிழுக்கு, அகழ்வாய்ந்த இடமெல்லாம் தமிழாக

தொன்மை மொழியென்று தொகுத்துரைத்தனரே அறிஞோர்

உலகியல் மொழிக்கெல்லாம் தாய்மொழியாய் இருந்து

கிளைத்தது மொழிகள் பலயிங்கு ,

தொல்காப்பியம் தந்து அகத்தியம்

தொட்டு என்னயில்லை

எம் ஏற்றத்தமிழில்

மேனாட்டு மோகத்தில் மெல்ல தமிழை சிதைத்தாலும்

தன்னை சூழலுக்கேற்ப தகவமைக்குமன்றோ எங்கள் சுந்தரத்தமிழ்

தெள்ளுத்தமிழது திக்கெட்டும்

பரவி என்றும்

வள்ளுவன், பாரதி வாக்கினை

உலகெலாம் உணர்த்தி ,

நாகரீக வளர்ச்சியின் கணினிக் கல்வியையும் கைப்பற்றி

செம்மொழியிது செழித்திடுமென்று தன்னை பறைசாற்றுது

மாற்றங்களேற்ப மாறிடும் வித்தகம்

அறிந்ததால் தானோ

நித்தமும் சுடர்விடும் தமிழானது இங்கு.....



*உமாராமச்சந்திரன்,*
*புதுவை.*

# Your Story Matters – Make it heard!

I still remember the first time I dared to open a blank page with the thought of writing a book. My hands froze on the keyboard. My mind was filled with questions: What if it isn't good enough? What if people laugh? What if I don't sound like a real writer? For days, I stared at that empty page, terrified of putting words down.

Have you ever felt the same way? That you have a unique story to tell the world, but the fear of writing holds you back? Maybe you worry that your command of the language isn't strong enough. Maybe you wonder, "What would people say if I write a book?" Deep down, though, you know your life is unique, your lessons are valuable, and your story deserves to be told. Or perhaps you know that you have the power to inspire, influence, and impact lives—but something keeps stopping you.

Friends, for me the fear was perfectionism. I thought if I write, I should write like Shakespeare, or Arundhati Roy, or maybe Charles Dickens. These were the legends I admired in the field of writing. But then I read Sudha Murthy's Wise and Otherwise and many more of her books. It made me realize that all you need to do is write authentically. Be the real you. Tell your story in a simple and understandable manner. That's what truly matters. I learned this from Sudha Murthy, and that helped me unleash my first book with co-author Dr. Ashwati, The Lady with the Magic Lamp. It was my great desire to write about my life's mentor, Dr. Rajamoul, who is a national awardee.



Now, you can decline by saying, "I don't have the talent," or escape by saying, "I am not interested enough." But let's be honest—the biggest barrier is not outside, it is inside. The real challenge is often in your own mind: self-limiting beliefs, fear of failure, mindset issues, perfectionism, and even lack of awareness.

Who am I to preach about this? I am an author coach who has guided more than 1,500 individuals—including a Canadian CEO, psychologists from India, doctors, scientists, and many more—to become published authors. I myself am a co-author of six books, including six Amazon bestsellers, and editor of ten books. I have been honoured with the India Prime Top 100 Author Award by FoxClues and the Times Ascent Top 100 Coaching Leaders Award. And from this experience, I can tell you clearly—the barriers are real, but they are also beatable.

Here are the six main barriers that stop aspiring writers from publishing a bestselling impactful book:

1. Failing to create a consistent writing schedule.
2. Not understanding the needs and expectations of readers.
3. Ignoring editing, proofreading, and pre-publishing essentials.
4. Overlooking the importance of a powerful book cover.
5. Not investing enough time or resources into marketing.
6. Neglecting pre-launch and post-launch strategies.

These are the hurdles, yes-but none of them are unbreakable. Write your way to success. Create your own unique legacy.

What is the legacy you want to leave for the next generation? How will people remember you 100 years from now? What kind of life lessons or tips do you want to pass on?

A book is your legacy. A book is the most affordable dream. It doesn't need millions of dollars or rupees to publish. It doesn't require you to be perfect. It only requires you to be you-simply you, courageous and authentic. And if you need help along the way, there are coaches like me who can guide you to become a published, best-selling, impactful author.

So, my closing question to you is this: What is stopping you?

Your story matters. Your voice matters. Your life matters. Your book could be the one that changes someone's life. Isn't it time you shared it with the world?




Manju K Manohar
TEDx Speaker's Coach,
NLP Practitioner,
Award-winning
public speaking mentor.

# செந்தமிழ் நாட்டுத் தமிழச்சி!

சிறப்பாக வாழத்தான் வேட்கை
சித்ரவதைப் படுகின்ற வாழ்க்கை
எட்டித்தான் செல்கின்ற கணவன்
விட்டுத்தான் கொடுக்காத மனைவி!

மற்றவளை நாடுமவன் மனது
மனதுக்குள் குமுறிடுவாள் அழுது
கல்லவனைக் கணவனென்று பொறுப்பாள்
காட்டியே கொடுக்காமல் இருப்பாள்!

கொடும்பாவி உன்கணவன் என்றால்
கொதிக்கும் எரிமலையாய் வெடிப்பாள்
அம்மாநீ நலம்தானா என்றால்
அதிர்ஷ்டசாலி நானென்று நடிப்பாள்!

கரும்பாக வளர்ந்ததையே நினைந்து
கண்ணீரை மறைக்குமவள் கண்கள் அந்தக்
கவின் கலையில் வல்லவரெம்
தமிழ் நாட்டுப் பெண்கள்..!!



சு. அமுதமணி கல்யாணசுந்தரம்.

# கேசரியும், கேசவனும்

கேசவன் தனது வீட்டின் கூடத்தில் அமர்ந்து, தொலைக்காட்சியில் செய்தியை பார்த்துக் கொண்டு இருந்தார்.

சிறிது நேரத்தில் கோவிலுக்கு சென்றிருந்த அவரது மனைவி பார்வதியும், மகள் சுமதியும் வந்தனர். பார்வதி தேநீர் போடுவதற்காக சமையலறை சென்றார்.

சுமதி அப்பாவின் நெற்றியில் திருநீறு இட்டு, தொன்னையில் தான் வாங்கி வந்த பிரசாதத்தை அப்பாவிடம் கொடுத்தாள். அதை ஆவலுடன் வாங்குவதற்காக கையை நீட்டினார். தொன்னையைப் பார்த்து விட்டு 'எனக்கு வேண்டாம்மா' என மறுத்தார்.

குழப்பத்துடன் சுமதி 'ஏன் வேண்டாம்னு சொல்றீங்க அப்பா!? எனக் கேட்டாள்.

'வேண்டான்னா விட்டுடேன்மா' என கேசவன் சலித்துக் கொண்டார்.

அவளுக்கு அவரது செய்கை வருத்தத்தை அளித்தது.

'நானும் கேட்கணும்னு தான் இருந்தேன். நம்ம வீட்டிலும் சரி, வேறு எங்காவது நிகழ்ச்சிகளுக்கு போனாலும் சரி இந்த கேசரியை மட்டும் ஏன் வெறுப்போடு பார்க்குறீங்க? சாப்பிடவும் மறுக்குறீங்க!?'

'அப்படியெல்லாம் இல்லமா' என சமாளித்தார்.

'எனக்காக அது ஏன்னு சொல்லுங்கபா' என்று கெஞ்சினாள்.

'சரிம்மா சொல்றேன், என்னோட அப்பா, அம்மா, பெரியம்மாவும் சேர்ந்து, எனக்கு பெண் பார்க்க ஒரு வீட்டிற்கு கூட்டி போனாங்க. அங்க போனதும் பெண் வீட்டார் எங்களை வரவேற்று உபசரிச்சாங்க. கேசரி கொண்டு வந்து கொடுத்தாங்க. நான் அந்த கேசரியை எடுத்து சாப்பிட்டு கொண்டு இருந்தேன்.

அப்போ என் பெரியம்மா 'என்ன கேசவா, கேசரி எப்படி இருக்கு?'ன்னு



என்னைப் பார்த்து கேட்டாங்க. நானும் உடனே 'ம்ம் நல்லா இருக்கே!' அப்படின்னு சொன்னேன்.

அடுத்த நொடி என்னோட பெரியம்மா, 'பையனுக்கு பொண்ணை பிடிச்சு போச்சு, சட்டுனு பேசி முடிச்சுடுங்க' என்று சொன்னாங்க. அதிர்ச்சியில் நான் நிமிர்ந்து பார்க்க, எதிரில் ஒரு பொண்ணு என்னை வெட்கப்பட்டு பார்த்து சிரிச்சா.

எனக்கு ஒன்னும் புரியல. வாய் திறக்க மறந்து, பேசமுடியாம தடுமாறினேன். அந்த கேசரியை விழுங்கவும் முடியல. மறுத்து பேசவும் முடியல. ஒரு வாய் கேசரியால என் வாழ்க்கையே போச்சு!' என கேசவன் கூறிக் கொண்டு இருக்கும் போதே சமையலறையிலிருந்து அவரது நெற்றியை பதம் பார்த்து விட்டு, சற்று சொட்டையாகி உருண்டோடியது சொம்பு.

பின் குறிப்பு: பெரும்பாலான ஆண்களுக்கு ஏதோவொரு இனிப்பு வாழ்வில் இப்படி விளையாடி இருக்கிறது!



சரஸ்வதி சந்திரசேகர்

# ஆடுவோமே! பாடுவோமே!



ஆடுவோமே ஒயில் ஆடுவோமே நாங்கள் ஆனந்தமாக ஒயில் ஆடுவோமே...பாடுவோமே நாங்கள் பாடுவோமே அய்யன் அழகுநாச்சி புகழ் பாடுவோமே... !

கூடுவோமே இளைஞர் கூடுவோமே வளநகர் புல்வை சிறப்போங்க கூடுவோமே.....

மருது மண்ணின் புகழ் பாடுவோமே எருதுவிளையாட்டை நாடுவோமே....!

தேடுவோமே பொருள் தேடுவோமே இளைய தலைமுறைக்கு வழிதேடுவோமே... ஒயில் கலையை நாமுமிங்கே வளர்த்திடவே ஒற்றுமையும் நாட்டில் நாளும் நிலவிடவே....!

ஆடுவோமே ஒயில் ஆடுவோமே நாங்கள் ஆனந்தமாக ஒயில் ஆடுவோமே பாடுவோமே நாளும் பாடுவோமே அய்யன் அழகுநாச்சி புகழ் பாடுவோமே....!

மக்களாட்சி முறையும் வலுப்பெறவே மாநிலத்தில் அமைதியும் காத்திட வே

ஓங்கு தமிழ்ப் புகழ்ப் பாடுவோமே நாம் ஒயிலும் ஆடியே மகிழ்வோமே....!

வண்ண மயில் முருகனை வணங்கி வழிபட்டுமே சிந்து கவியும் நித்தம் பாடுவோமே.....

காவடிச்சிந்து கவியும் நித்தம் பாடுவோமே....!

சிந்தையை சீராக்கி ஒயில் ஆடுவோமே....!

முந்தையோர் வணக்கம் பாடுவோமே....!

காந்திய வழியினை நாடுவோமே......! நாளும் கனித் தமிழ் மணக்க பாடுவோமே.....!



புல்வை.செல்வமீனாள்

# கவிதை

## ஊடகங்கள்!

ஆபாசம், துவேஷம், வெறுப்பு,
பாலியல் வக்கிரங்கள், குற்றச்செயல்,
பஞ்சமாபாதகங்கள்ஞ்
இவை பற்றியே
பத்திபத்தியாய்
வத்தி வச்சு நாள்முழுதும்
கத்திவிட்டு ஞ்
“ஆஹா!
இவையெல்லாம் சரியா?
இப்படி நடக்கலாமா?”
எனக் கடைசியாக
ஒரு “ஒன் லைனை”
நீதிபோதனையாகச் சொல்லி விட்டு,
அதிகப்பார்வையாளர் பெறுவதொன்றே
குறியாகிப் போன
“உண்மையச்(?)
சொல்லும் ஊடகங்கள்!



## தவிக்கும் மனங்கள்!

கருக்கலிலே கறவை மாடு
கூப்பிடுமே அடிக்குரலில்!

காலைக் காற்றுடன் கலந்து
வரும் பறவைகள் சத்தம்!

கதிரவனும் காயத் தொடங்க
கலவையான சத்தங்கள்!

அந்தி நேர அமைதியில்
அடுத்தடுத்த ஓசைகள்!

ஊரடங்கி உறங்கையிலே
ஒடுங்கிப் போகும் ஓசைகள்!

தனியே தவிக்கும் மனங்களோ
தத்தளிக்கும் மனதின் பேரோசையில்!





## அண்ணலே!

விண்ணகமும் வியக்குதய்யா உன்
விந்தையான அஹிம்சை நெறி கண்டு!

இன்று காணும் போர் வக்கிரங்கள், வன்மங்கள்
என்று தீரும் என அறிந்திலோம் யாம்!

புவிமிசை வாரீரோ அண்ணலே! மீண்டும் நல்
வழி காட்டி, எம்மை உய்விக்க வேண்டுமய்யா!

கமலா முரளி

# Mother's Special



"Ghosts will remain with ghosts, why should they come to you.... you are not their friend." These were the words of comfort and confidence a seven year old daughter got from her mother.

Vishakha and her friends had started narrating ghost stories during their summer vacation to each other. Interesting to hear, but as the Sun set and darkness descended, Vishakha couldn't but keep away from her mother's saree pallu. She kept looking at dark corners and dark staircases wondering if there could be a ghost there who would pounce on her.

Vishakha at last opened up to her mother saying she was afraid of confronting a ghost after Shahida had narrated the story. Her mother asked her " Who do you hang around with ?" "My friends Shahida and Anshika, Amma". "

Why do you not hang around with birds , cows or crows?"

" How can I?.... They are not my kind." So you see everybody hangs around with their kind. Crows with crows, cows with cows, sparrows with sparrows, even frogs with frogs and uncles with uncles, mummies with mummies... right... so ghosts too hang around with their kind. Why will they come to you, when they have their own friends...

Vishakha felt relieved for the moment and her thinking process began...mom is always right...so I can forget worrying and thinking of ghosts.

Mothers are always right, God made them because they couldn't be available always.



Vineetha Gopalakrishnan
Primary teacher,
Kendriya Vidyalaya
Chennai 600073.

# ஆக்சிஜன்

நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில் 70% தயாரிப்பது பெருங்கடல்கள் தான் என்பது உங்களுக்கு தெரியுமா..? ஆம்... 25%த்தை அமேசான், போர்னியா போன்ற வெப்பமண்டல காடுகளும், மீதமிருக்கும் 5%தான் நாம் வளர்க்கின்ற மரங்களும் செடிகளும் கொடுக்கின்றன.

பெருங்கடல்கள் தயாரிக்கின்றன என்றால் எப்படி?

எந்த அதானியும், அம்பானியும் அங்கே தொழிற்சாலைகள் வைத்து ஆக்சிஜனை தயாரிக்கவில்லை. கடலில் உள்ள சின்ன சின்ன உயிரினங்கள் தான் தாங்கள் உணவு தயாரிக்கும் முறையில் ஆக்சிஜனை வெளியிடுகின்றன. அதனால் தான் நமக்கு ஆக்சிஜன் கிடைக்கிறது. நம்முடைய கட்டை விரலின் மேற்பகுதியில் உள்ள அளவில் மட்டும் சுமார் 10 லட்சம் உயிரினம் இருக்கும் அளவிற்கு சிறிய தொரு உயிரினம், "ப்ரொக்ளோரோகாக்கஸ்" (prochlorococcus).



அந்த சிறிய உயிரினம்தான் நாம் சுவாசிக்கக்கூடிய ஐந்து மூச்சில் ஒரு மூச்சுக்கான ஆக்சிஜனை தயாரிக்கிறது. அப்படியெனில் கடலின் மகத்துவம் எப்பேற்பட்டது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் "கடல் ஒன்றும் நம்முடைய குப்பைதொட்டியல்ல நினைத்த குப்பையெல்லாம் கொண்டு கொட்டுவதற்கு" காலநிலை மாற்றம் கடல்களின் வெப்பத்தை அதிகரிக்க அதில் உள்ள பவளப்பாறைகள் அழிந்துவருகின்றன. அவைதான் சிறிய உயிர்களின் வாழ்விடம்.

அணுக்கழிவுகள், அனல்மின் நிலையக் கழிவுகள், ரசாயன தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவுகள், நகர கழிவுகள், ரசாயன பூச்சு மற்றும் 'பிஓபி"யில் (POP) செய்யப்படும் சாமி சிலைகள், நெகிழி என நாம் கடலில் கொட்டும் குப்பைகளால் நாம் சொந்தக்காசில் சூனியம் வைத்துக் கொள்வது போன்றது. இந்த கழிவுகள் அனைத்தும் கடலில் வாழக்கூடிய சிறிய உயிரினங்களை பாதிக்கின்றன. அது நமக்கான ஆக்சிஜன் தயாரிப்பை பாதிக்கிறது.

அதனால்தான் சொல்கிறோம். இப்போது மட்டுமல்ல எப்போதும் கடலில் கொண்டு எதை கரைப்பதையும் தடுக்கவேண்டும்; தவிர்க்கவேண்டும்.



டாக்டர் சுப்புலட்சுமி சாய்
மயிலாடுதுறை

# நம்பிக்கை தரும் இளைய சமுதாயம்

இன்றைய இளைஞர்களைப் பார்த்து அவர்களது பொறுப்பற்ற தனத்தைப் பார்த்து பல நாட்கள் வேதனை அடைந்துள்ளேன்.

அரை குறையாகப் படித்து, தகுதியை வளர்த்துக் கொள்ள முயற்சிக்காமல் ,வேலை கிடைக்காமல் பெற்றோர் தயவில் வாழும் இளைஞர்கள் சிலர். எந்தப் பொறுப்பையும் ஏற்கத் தயங்கித் தயங்கியே காலத்தைக் கடத்துபவர்கள் சிலர்..எப்போதும் சுயமாக சம்பாதிக்காமல், தன்னம்பிக்கை இல்லாமல் பிறரைச் சார்ந்தே வாழும்

வாழ்க்கையை சோம்பலால் விரும்பியே ஏற்கிறார்கள்.

படித்த நல்ல வேலையில் இருக்கும் பல இளவயதினருக்கும் ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் விடிவதே இல்லை.

நினைத்த நேரத்தில் தூங்கி நினைத்த நேரத்தில் எழுந்து

ஜொமாட்டோ ,ஸ்விக்கி என எதிலாவது ஆர்டர் போட்டு கண்டதையும் சாப்பிட்டு உடலைக் கெடுத்துக் கொள்வார்கள்.

கணவரின் நண்பருக்கு இரண்டு மகன்கள்.பெரியவருக்கு இருபத்து நான்கு வயது.சொந்த வீடு இருந்தும் திருமணமாகாத அவர் நான் தனியே அறை எடுத்துத் தங்கிக் கொள்கிறேன் என்று சொல்ல நண்பர் அதிர்ந்து போனார். காரணம் வீட்டில் உள்ள கட்டுப்பாடுகள் அவருக்குப் பிடிக்கவில்லை.

வீடு, குடும்பம் என்பதே சில நியதிகளுக்கு உட்பட்டு கட்டமைக்கப்பட்டது தானே. அதனால் தானே இன்றளவும்

நம் பண்பாடும் கலாச்சாரமும் ஓரளவாவது பின்பற்றப்படுகிறது.

இன்றைய இளைய சமுதாயம் கட்டுப்பாடுகளை விரும்புவதில்லை. கட்டற்ற சுதந்திரம், முறையற்ற உறவுகள், விருப்பத்தகாத பழக்கவழக்கங்கள், சுயநலம் நிறைந்ததாகவே இருக்கிறது. நகரங்களில் மட்டுமல்ல கிராமங்களிலும் பல இளைஞர்கள் வேலைக்குப் போகாமல் அல்லது தகுதிக்கு மீறிய வேலைக்கு ஆசைப்பட்டு வேலை கிடைக்காமல் நேர விரயம் செய்கிறார்கள். பரபரப்பான காலை நேரத்தில் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து கதை பேசுபவர்களைப் பார்த்து ஆச்சரியமாக இருக்கும். உழைக்க வேண்டிய வயதில் வயதான பெற்றோர் உழைப்பில் உடல் வளர்த்து வீணாய்ப் பொழுது போக்க இவர்களுக்கு எப்படி மனம் வருகிறது?

இதையெல்லாம் பார்த்து மொத்த இளைய சமுதாயம் இப்படித்தான் என்றும் கருத இயலாமல் அவ்வப்போது நமக்கு நம்பிக்கை விதைக்கும் சிலரையும் காணமுடிகிறது.

கடந்த ஆகஸ்ட் 15 சுதந்திர தினவிழா அன்று ரோட்ராக்ட் கிளப், ஒசூர் இளைஞர் இளைஞிகள் எங்கள் பள்ளிக்கு வந்து விழாவை சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். அதில் குறிப்பாக ஒரு இளைஞர் சேலத்தில் இருந்து அதிகாலை மூன்று மணிக்குப் புறப்பட்டு நான்கு பேருந்துகள் மாறி சரியான நேரத்திற்கு சற்று முன்னதாகவே பள்ளிக்கு வந்துவிட்டார். பொதுவாக விடுமுறை தினங்கள் சோம்பலைப் போர்த்திக்கொள்ளும். காலை உணவை மதியமும் மதிய உணவை மாலையும் உண்டு இணையத்தில் நேரத்தைக் கழிப்பார்கள்.இவர்கள் .. ஏறக்குறைய இருபது பேர் காலை நாங்கள் சொன்ன நேரத்திற்கு முன்னதாகவே வந்து விழாவை

மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள்,எழுது பொருள்கள், இனிப்புகள்,சமோசா வழங்கி தேனீக்கள் போல சுறுசுறுப்பாக இயங்கியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவர்கள் அனைவரும் இப்போதுதான் பணியில் சேர்ந்தவர்கள், சிலர் கல்லூரியில் படிப்பவர்கள். இவர்களைக் காணும் போது மனதுக்கு நிறைவாக இருந்தது.

தற்போது பல திருமணங்களிலும், பிறந்தநாள் போன்ற விழாக்களிலும் வரவேற்பு,பரிமாறுவது என அனைத்து வேலைகளையும் கல்லூரி மாணவர்கள் பகுதிநேரப் பணியாக செய்வதையும் அதிகமாகக் காண முடிகிறது.

பகலில் கல்லூரிப் படிப்பும் மாலையில் பகுதி நேர வேலையும் செய்து தனக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இளைஞர்களும் ஏராளம்.

எங்கள் வீட்டு உதவியாளர் புஷ்பாவின் மகன் கோவையில் ஒரு கல்லூரியில் டிப்ளமோ படிக்கிறார். புஷ்பாவிடம் அலைபேசி இல்லாததால் மகனிடம் அடிக்கடி பேசமுடியாது. ஒருமுறை மகனுக்கு உடல்நலம் இல்லாமல் போக...மகன் தாயிடம் நான் ஒருவாரமா உடம்பு முடியாம இருக்கேன்.நீ ஒரு போனாவது பண்ணி விசாரிச்சயா அம்மா? என்று கேட்க ... புஷ்பா நான் எந்த போன் வச்சிருக்கேன்பா விசாரிக்க என்று கேட்டு இருக்கிறார்.

அடுத்து ஒரு மாதம் கழித்து மகன் விடுமுறைக்கு வரும் போது 13,000 கொடுத்து ஒரு போன் வாங்கிக் கொடுத்து இருக்கிறான். இவ்வளவு பணம் ஏதுப்பா என்று விசாரித்தால்... பகலில் கல்லூரிக்கும் இரவு முழுவதும் பெட்ரோல் பங்க் கில் வேலைக்கும் போய் சம்பாதிச்சு வாங்கினேன் அம்மா. இனிமே நீ என் கிட்ட தினமும் பேசலாம் மா என்று சொல்லி நெகிழ வைத்திருக்கிறான்.

அவள் மகனைப் பற்றி பெருமிதத்தோடு சொல்லி போனைக் காட்டும் போது எனக்கும் மனம் நெகிழ்ந்து போனது.

சோம்பலிலும்,தகாத செயல்களிலும் மூகவலைதளங்களிலும் நாம் வீணாக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் எத்தனையோ பேர் கடுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கண்ணும் கருத்துமாய் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எத்தனையோ இளைஞர்கள் நாட்டைப் பாதுக்காக்க எல்லையில் காவல் காக்கிறார்கள். உற்றார் உறவினரைப் பிரிந்து அயல்நாட்டில் பொருளீட்டுகிறார்கள்.

பொறுப்போடு தன் கடமையை உணர்ந்து செயலாற்றும் செயல்வீரர்கள். இவர்களால் வீடு மட்டும் அல்ல நாடும் ஏற்றம் பெறும்.

சோம்பலிலும், தகாத செயல்களிலும், சமூக வலைதளங்களிலும் நாம் வீணாக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் எத்தனையோ பேர் கடுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கண்ணும் கருத்துமாய் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எத்தனையோ இளைஞர்கள் நாட்டைப் பாதுக்காக்க எல்லையில் காவல் காக்கிறார்கள். உற்றார் உறவினரைப் பிரிந்து அயல்நாட்டில் பொருளீட்டுகிறார்கள்.

பொறுப்போடு தன் கடமையை உணர்ந்து செயலாற்றும் செயல்வீரர்கள். இவர்களால் வீடு மட்டும் அல்ல நாடும் ஏற்றம் பெறும்.



திருமதி.R.ருக்மணி
ஆசிரியை, ஒசூர்

# கண்டடையும் காலம் கனிந்து விட்டது

முனைவர் மஞ்சுளா



உயிர்கள் வாழ்வதற்கு தகுதியான இடமாக இந்த உலகம் இருக்கிறது. இந்த நிலப்பரப்பு வழங்கி வரும் வாய்ப்பைக் கருணையுடன் நினைத்துப் பார்க்கச் சிந்தனையாளர்கள் தவறுவதில்லை. இக்கட்டான சூழலில் கூட ‘‘எத்தனை கோடி இன்பம் வைத்தாய்‘‘ என்று கவிஞர்களால் பாட முடிகிறது. ஆனாலும் ஒருவரின் வாழ்க்கையை இன்னொருவர் தட்டிப் பறிக்கும் வன்முறை பல நேரங்களில் அரங்கேறி வருகிறது. அனைவருக்குமான வாய்ப்பை ஒரு சிலர் மட்டும் மறைத்து வைத்துக் கொண்டு, தாங்களே வெற்றி பெற்றவர் என்று பெருங்குரலில் கூவுவது மனிதாபிமானமற்ற செயல்.

பெண்களும் ஆண்களும் கலந்திருக்கும் இந்தச் சமுதாயத்தில் ஆண்களுக்கு மட்டும் எல்லா வாய்ப்புகளை வாரி வழங்கி விட்டு, பெண்களுக்கு எந்த வாய்ப்பையும் தர மறுப்பது அநீதி அல்லாமல் வேறென்ன? இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கால் பதிக்காத துறையே இல்லை என்று சொல்லி விடலாம். வீட்டு வேலைகளில் தொடங்கி விண்வெளித் துறை வரை எல்லாத் துறைகளிலும் சாதித்து வருகின்றனர். ஆனாலும் துறைவாரியாக பெண்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும் போது, பல துறைகளில் குறைந்த எண்ணிக்கை யிலான பங்களிப்பை மட்டுமே பார்க்க முடிகிறது. குறிப்பாக ஊடகத்துறையில் சாதித்து வரும் பெண்கள், கூடவே பல சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

பொதுவெளிகளுக்கு வரும் மகளிரை முடக்க நினைக்கும் சமுதாயம் அவள் நடத்தை சார்ந்த அவதூறுகளைப் பரப்புவதன் வழியாகத் தன் வக்கிரத்தை வெளி காட்டிக் கொள்கிறது. ஊடகத்துறையில் வேலை பார்க்கும் பெண்களில் கிட்டத்தட்ட 75% பெண்கள் பணிகளில் கவனம் செலுத்த முடியாதபடி அச்சுறுத்தப்படுகிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது ஊடகத்துறையில் மகளிருக்குச் சாதகமான சூழல் இல்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது. இதைப் போலவே உரிமைகள் சார்ந்த நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர்.

காட்சி ஊடகத்தில் பெண்களைச் சித்தரிக்கும் போக்கு ஆரோக்கியமானதாக இல்லை. அச்சு ஊடகத்தின் நிலையும் சில நேரங்களில் கவலை தருகிறது. பெண்களின் அட்டைப் படங்களை நம்பியே பல பத்திரிகைகள் விற்பனைக்கு வருகின்றன. பெரும்பாலான விளம்பரங்களில் பெண்களே காட்சிப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றனர். ஆளுமைமிக்க பெண்களை அழகை நோக்கி மட்டுமே சிந்திக்க வைப்பதால் சமுதாயத்திற்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது?

இந்த நூற்றாண்டிலும், பெண்களின் அறிவுத்திறத்தை வியக்கும் நபர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். பொருட்களை விளம்பரப்படுத்த பெண்களைத் தேர்வு செய்யும் இந்தச் சமுதாயம் முதன்மை செய்தி ஆசிரியராக வரவேற்பதில் ஏன் சுணக்கம் காட்டுகிறது! அதையும் தாண்டி சுகிதா சாரங்கராஜ் என்ற சாதனை பெண் காட்சி ஊடகத்தில் தன் இருப்பைத் தக்க வைத்ததன் வழியாகத் தன்னுடைய பிறந்த

கிராமத்தை அடையாளப்படுத்தி இருக்கிறார். தன்னுடைய பெயருடன் அப்பாவினுடைய பெயரையும் இணைத்துக் கொண்டு பெற்றெடுத்து வளர்த்த தந்தைக்கும் பெருமை தேடித் தந்திருக்கிறார். இவர் தான் தமிழ்ச் செய்தித்துறை வரலாற்றில் முதல் பெண் தலைமை செய்தி ஆசிரியர் என்பதை எத்தனை நபர்கள் கொண்டாடத் தயாராக இருக்கின்றனர்! தெளிவான அரசியல் பார்வையும், கடின உழைப்பும், விடா முயற்சியும் கொண்டு, அனைத்துத் தடைகளையும் தாண்டி உச்சம் தொட்டுள்ள இவர், ஒவ்வொரு பெண்ணுக்கும் பெரும் உந்துசக்தி.

இன்று எல்லாத் துறைகளிலும் முன்னேறி விட்டனர், தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் மாப்பிள்ளைமார்கள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கும் வகையில் இவர்களின் வாழ்வு அமைந்திருக்கிறது என்று சிலர் புகைச்சலுடன் பேசுவது நம் காதுகளில் விழவே செய்கிறது. ஆனாலும் பெண் விடுதலையும் மகளிர் முன்னேற்றமும் அனைத்துத் தரப்புத் தோழிகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றனவா என்ற கேள்வி இன்றும் நீடித்த நிலையிலேயே நிற்கிறது.

சாதிக்கத் துடிக்கும் மகளிரின் பெரும்பான்மையான நேரங்களைக் குடும்பமே விழுங்கி விடுகிறது. இதனால் தங்களுடைய கனவுகளுக்குக் கொள்ளி வைத்துக் கொண்டு, வீட்டிலேயே முடங்கி விடுகின்றனர். வரதட்சணை தடுப்புச் சட்டம் அமலில் இருந்தாலும், வரதட்சணை கொடுமைகள் நடந்து விடுவதைப்போல, பெண்கள் கல்வி கற்பதும், வேலைக்குச் செல்வதும், சுய சம்பாத்தியத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதும் சாத்தியப்பட்டிருந்தாலும் முழுமையான அடிமைத்தனம் ஒழிய இன்னும் கடக்க வேண்டிய தூரம் அதிகமிருக்கிறது.

சமீபகாலமாகத் திரைப்படத் துறையில் பெண் இயக்குநர்களைப் பார்க்க முடிகிறது. திரைப்படத்தை இயக்கவோ, பாடல் எழுதவோ, ஒளிப்பதிவு செய்யவோ, வீர வசனங்கள் பேசவோ ஆண்களே தகுதியானவர்கள் என்று சொல்லி வைக்கப்பட்ட சமுதாயத்தில் அத்தி பூத்தது போலப் பெண்களின் வருகை மிகுந்த கவனத்தைப் பெற்றிருக்கிறது.

பல ஆண்டுகளாக ஒரு பெண்ணின் காதலை ஆண்களே சொல்லி வந்த நேரத்தில், காதலியின் உணர்வைப் படம் பிடித்த கவிஞர் தாமரையின் வரிகள் அமரத்துவம் பெற்றன.

''குங்குமப் பொட்டின் மங்கலம்'' என்ற இந்த ஒரு பாடல் எழுதிய பிறகு காணாமல் போன ரோஷ்னாரா பேகத்தை இன்றுவரை தேடிக் கொண்டிருக்கிறோம். அந்தக் காலத்தில் பிரபலமான பாடலை எழுதியிருந்தாலும் அடுத்தடுத்த பாடல்கள் அவர் எழுதாமல் போனதற்கு காரணம் தெரியவில்லை.

பெண் என்பவள் வெறும் உறுப்புகள் அல்லள். அவள் ரத்தமும், சதையும், உணர்வும் கொண்டவள் என்ற கருத்து அழுத்தமாகப் பதிவு செய்யப்படும் போது பாலின வித்தியாசம் ஒழியும். பிள்ளை வளர்க்கும் முறையில் ஒரு பெண்ணை எப்படி நடத்தவேண்டும் என்ற வழிகாட்டுதல் நிச்சயம் வேண்டும்.

குழந்தைகள் நம்மைப் பார்த்தே கற்றுக் கொள்கின்றனர் என்பதால் மூத்த தலைமுறை கொஞ்சம் அக்கறையுடன் பெண்களை மதித்து நடந்தால் அதைப் பார்க்கும் இளைய தலைமுறையினர் தாமாகவே முன்வந்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் பெண்களைப் பற்றிய மூத்த தலைமுறை யினரின் பார்வை வேறாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. ஆனால் இன்றைய இளைஞர்கள் கல்வி நிலையங்களில், பணியிடங்களில், பொதுவெளிகளில் வலம் வரும் பெண்களின் பங்களிப்பை பப் பார்த்து, அவர்களுக்கு மதிப்பு தரும் இடத்திற்கு நகர்ந்திருக்கின்றனர் என்பது வரவேற்கத்தக்க மாற்றம்!

# நான் தான் அவள்

**Dr. R.** ராஜம்மாள் **MA, M. Ed, PGDGC, D.Let** தேசிய நல்லாசிரியை,
பெண் சாதனையாளர், சமூக ஆர்வலர்

## அன்னையை ஆராதனை செய்யுங்கள்

தொடர் : 4



அம்மா என்று சொன்னாலே தியாகம், உழைப்பு என்று சொல்வது வழக்கம். அம்மா என்ற வார்த்தைக்கு அர்த்தமே இப்படித்தானே என்று நினைப்போம். எல்லா அம்மாக்களும் இப்படித்தானா ? அதுவும் இந்த காலகட்டத்தில் இதற்கு பதில் கிடைப்பது மிக சிரமம். நாகரீகம் தலைவிரித்து ஆடும் இந்த காலகட்டத்தில் கைபேசி தான் வாழ்க்கை என்று ஆகிவிட்டது.அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் மனதளவில் விவரிக்க முடியாத தூரம். வாழ்க்கையே இந்திரமயம் ஆகிவிட்டது. பந்தமும் பாசமும் அர்த்தம் இல்லாமல் போனது.

ஜானுவோட அம்மா சரசு பற்றிய நிறைய விஷயங்கள் ஜானுக்கு புரியவில்லை. காலம் செல்ல செல்ல தான் நிறைய விஷயங்கள் புரிந்தது. ஜானுவின் அம்மா சரசு ராமச்சந்திரன் ஒரு வித்தியாசமான அம்மா. சரசுவிற்கு அவள் வாழ்க்கையே ஒரு விசித்திரமான போராட்டங்களை பார்க்க வேண்டிய நிலை வந்தது. பெற்றவர்களின் கட்டாயத்தால் பொருத்தமே இல்லாத ராமச்சந்திரனை திருமணம் செய்து கொண்டார். நான்கு அடி தான் சரசுவின் உயரம். கணவரின் உயரம் ஆறடிக்கு மேல். சுண்டினால் ரத்தம் வரும் நிறம் சரசுவுக்கு. கன்னத்தை தொட்டால் மையுடும் அளவுக்கு கருப்பு வண்ணம் ராமச்சந்திரனுக்கு.

ஆனால் ராமச்சந்திரன் மிகவும் நல்ல மனிதர். சூழ்நிலை காரணத்தால் மதுவுக்கு அடிமை ஆகின்றார் . இரண்டு வருட இடைவெளியில் ஐந்து குழந்தைகள். இவர்களுடன் சேர்ந்து மாடு மேய்க்கும் பையன் ஆறாவது குழந்தை. சரசு அசுர உழைப்பாளி.

காலையில் நான்கு மணிக்கு ஆரம்பித்தால் இரவு 11 மணிக்கு தான் அவள் வேலை ஓயும்.விடிகாலை நாலு மணிக்கே அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள குழாய் அடியில் 20 குடங்கள் தண்ணீர் சுமந்து வரணும். தினமும் வீட்டில் எட்டு பேருக்கு சமையல் வேலை.9:00 மணி ஆனால் வேலைக்காரர்களை அழைத்து கொண்டு தேயிலை தோட்டத்துக்கு போகவேண்டும். இதற்கு நடுவே ஒரு பசு மாட்டிற்கும் கன்று குட்டிக்கு தண்ணி கொடுத்து பால் கறந்து, குழந்தைகள் போல் பசுக்களையும் பராமரிப்பாள். சாயந்திரம் வரதுக்கு அஞ்சு மணி ஆகும் அதுக்கப்புறம் வீட்டிற்கு வந்து வீட்டு வேலை செய்து மறுபடியும் சமையல் .

அப்பா மதுபோதையில் வருவாரா இல்லை நார்மலா வருவாரா என்று ஒன்னும் தெரியாமல் பயத்தில் இருப்பார். அப்பா போதையில் வழியில் விழுந்து கிடைப்பதாக வீட்டிற்கு வந்து

சொல்வார்கள். அவரை யாருடைய உதவியோடு வீட்டிற்கு அழைத்து வருவார். குடல் வெந்து செத்து போய்டுவாரோ என்ற பயத்தில் அவர் வாயில் தயிர்சாதத்தை திணித்து விடுவாள்.

இந்த பிரச்சனைக்கு நடுவே செயற்கை பல் செட் காணமல் போய்விடும். அதைவேற தேட வேண்டும். இப்படியே ஆண்டுகள் பல ஓடியது. அறுபது வயது வரை காலில் செருப்பு போட்டது இல்லை. பூமி தாய்க்கு கொடுத்த மரியாதை.

சரசுவுக்கு தெய்வீக அழகு,கருத்த சுருட்டை முடி, பளிச்சென்று சிரிப்பு (அடுப்பு கரி பவுடரில் பல் தேய்ப்பது வழக்கம்). சலிக்காத உழைப்பு. அதீத புத்திசாலித்தனம் மனிதநேயத்தின் மொத்த உருவம். தோட்டத்திற்கு தேயிலை பறிக்க பத்து வேலையாட்கள் ஏழு நாள் சென்றால் நாள் கூலி 40 ரூபாய் மொத்தம் எத்தனை ரூபாய் என்று கேட்டாள் அடுத்த நொடி பதில வரும். ஜானு அப்போது தான் பேனாவையும் பேப்பரையும் எடுப்பாள். சரசு பள்ளிக்கூடம் வாசலைக் கூட மிதித்ததில்லை. ஜானுவுக்கு பிறகு தான் புரிந்தது புத்தகபடிப்பு வேறு புத்திசாலிதனம் வேறு என்று.

சரசுவிற்கு ஜாதி மத வேறுபாடு பிடிக்காது. மேரி மாதாவிற்க்கு ஊதுபத்தி காட்டுவாள். மசூதிக்கு சென்று குழந்தைகளுக்கு கருப்பு கயிறு கட்டி விடுவாள். உயர்ஜாதி, கீழ் ஜாதி அவர் பார்த்தது இல்லை. வேலையாட்களும் மாட்டுகார பையனும் அனைவருக்கும் சமமே. எல்லோரிடமும் அன்பு செலுத்துவார்.

இப்போது நினைத்தால் கூட ஜானுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும் வேலைக்காரர்களை அவ்வளவு சந்தோஷமா பார்த்துகொள்வார்கள். தேயிலை பறிக்கும் போது நிறைய கதைகள் சொல்வார்கள். வேலை பளுவே அவர்களுக்கு தெரியாமல் போய்விடும். சொல்லும்போது மூணு மணி நேரம் அந்த கதையை விரிவாக சொல்வார். உடுத்தியிருந்த உடையில் ஆரம்பித்து முழு கதையும் உணர்ச்சிப்பூர்வமாக சொல்வார். அந்த காலத்து சினிமா கதை பாசமலர் திருவிளையாடல் அந்த மாதிரி சினிமாக்கள் பார்த்துவிட்டு வந்து அவங்களுக்கு கதை சொல்லுவாங்க. இலை பறிச்சுக்கிட்டே கதை கேட்பாங்க அதனால வேலைக்காரங்களுக்கு ஜானு அம்மாவோட வேலை செய்ய அப்படி ஒரு ஆசை. பொழுது போவதே தெரியாது.

மத்தியானம் சாப்பாட்டோட சரசு அவங்களோட சாப்பாட்ட வேலைக்காரங்க சாப்பாட்டையும் சேர்த்து கலந்து சாப்பிடுவாங்க. எப்படிம்மா அவங்க எப்படி சமைச்சாங்களோ என்ன சுத்தமா இருந்ததோ அத எப்படி சாப்பிட முடியும் என்று கேட்டால் அவங்க அன்பா குடுக்குறாங்க நானும் எங்கிட்ட இருக்கறத கொடுக்கிறேன் அப்படித்தான் சொல்லுவாங்க. சக பணியாளர்களை எவ்வளவு அழகா அன்பா அனுசரிச்சு வேலை வாங்குவது என்ற டெக்னிக் வந்து சரசுவுக்கு கைவந்த கலை. அவ்வளவு அற்புதம் எல்லாம் வேலைக்காரங்களையும் தான் தான் முதலாளி அவர்களே வேலைக்காரர்கள் ஒருக்காலும் சரசு வித்தியாசம் பார்த்ததே கிடையாது.

மாசத்துக்கு ஒருவாட்டி எல்லாரையும் ஒருசினிமாகூட்டிட்டுபோவார்கள்.அந்த சினிமா கொட்டகைக்கு கிட்டத்தட்ட 8 கிலோமீட்டர் தூரத்துக்கு நடந்தே போவார்கள்.

ஜானு தன் அன்னையை எப்படி ஆராதித்தாள் என அடுத்த தொடரில் பார்க்கலாம்.

மீண்டும் வருவேன்

நான்தான் அவள்...

# சினிமாவில் பெண்கள் நிலை!

அனைத்து துறைகளிலும் பெண்கள் சாதிப்பதில் என்ன பிரச்சனை?

பெண்களுக்கு மட்டும் ஆயிரத்து எட்டு கேள்வி வீணான கேள்விகள் வைப்பதில் என்ன இன்பம்?

கதாநாயகர்கள் கோவணம் கட்டி இருந்தாலும் அவர்களை பேசாதவர்கள்

கதாநாயகிகள் உடையை மற்றும் தூற்றுவது ஏன்?

தயாரிப்பாளர் இயக்குநர் இரசிகர்கள் சம்பந்தமாக

தன் கூலி(சம்பளம்) உயர்வுக்காக

இவர்கள் இப்படி உடை உடுத்துகிறார்கள்.

அப்படி இப்படி பெண்கள் உடை போட்டு நடிக்க வேண்டாம் என்றால்,

தயாரிப்பாளர் இயக்குநர் கதாநாயகர்கள் இரசிகர்கள்

இவர்கள் அனைவரும் சேர்ந்து,

ஒழுங்காக உடை அணியும் கதாநாயகிகளுக்கு மட்டும்தான் கூலி ஒழுங்காக தரப்படும் அதிகமாக தரப்படும் என்று கூறுங்கள்.

ஒழுங்காக நடிக்கும் பெண்களுக்கு மார்கெட்டிங் போகாமல் பல படங்களில் நடிக்க (call sheet) அழைப்பு தான் தாருங்கள்.

கதாநாயகர்களையும் அரைகுறையாக நடிக்க வேண்டாம் என்று கூறுங்கள்.

அப்போ எந்த கதாநாயகிகளும் இப்படி உடைகள் அணிய மாட்டார்கள்.

பல கோடி மக்கள் நடுவே இந்திராகாந்தி செயலலிதா அம்மையார்கள்

பல புலவர்கள் நடுவே அரசவையில் பெண்பாற் புலவர்

மாமதுரை நடுவே அங்கயற்கண்ணி (மீனாட்சி)

சிவனையே காலால் மிதித்த காளி



பத்து பெண்களை வைத்து குடும்பம் செய்த ஆண்கள் நடுவே

ஐந்து பேரோடு திரௌபதி

விபச்சாரியா போனாலும் 10 பிள்ளைகளை காப்பாற்ற தன்னுடலை ஆண்களிடம் சல்லி சல்லியா காயப்படுத்திக் கொண்ட பெண் .

குடும்பத்தில் பல இடர்பாடுகளுக்கு இடையே

சமூகத்தில் பல இன்னல்களுக்கு இடையே வாழும் பெண்கள் (சம்சாரிகள்)

இப்படி சாதனை பட்டியல் வரிசையில்,

ஆணுக்கும் பெண்ணுக்கும் திரைப்படத்தில் ஒரே திறமை ஒரே உழைப்பு

ஆனால்

உடலை காட்டாமலே ஆண்களுக்கு மதித்து சம்பளம் ஏற்றித் தரும் உலகில்

50 ஆண்கள் நடுவே ஒரு பெண் அரைகுறையாக துணிச்சலாக ஆடி சம்பளம் வாங்கியது

சிலருக்கு இழிவாக இருக்கலாம்.ஆனால் பல சோதனைகளை கடந்து திரையில் ஆடும் அந்த பெண்ணுக்கு அது சாதனை!



**விண்ணரசி வேளாங்கன்னி**

# மனிதர்கள் ஜாக்கிரதை!

நாய்தான்
நாங்கள் வீட்டிற்கும் காட்டிற்கும்
இடைப்பட்ட வீதிக்குப்
பழகிவிட்டோம்

சோறு அள்ளி மனிதன்
தெருவில் வைத்ததற்கே
வாலாட்டி விட்டோம்

இன்று!
கடப்போரை
கடித்ததற்காக
நடக்கும் போரில்
அடக்குமுறை
அப்பாவிகளான
சாது நாய்கள் தோளில்

கொலை செய்யும்
நபர்தானே குற்றவாளி,
உங்கள் சட்டம்!
முழு மனித இனத்திற்கு தருவதில்லை
சிறை வலி.

வாயில்லாத எங்களால்
வாய்தா வாங்க இயலாது
என்று தானோ!
அஃறிணைகளுக்கு இங்கு
சமநீதி இல்லை.

எந்த சிட்டுக்குருவியின் கொலையிலும்
முதல் தகவல் அறிக்கையில் மனிதர்கள்
பெயர் இல்லை
அழிந்துவிட்ட கழுதைகளைத்
தேடி எந்த அக்கறைகளும்
ஆட்கொணர்வு மனு போடவில்லை

இன்று!
பிஸ்கட் கரங்களுக்கும்
பிடிக்கம்பி சுற்றிய
கம்புகளுக்கும் இடையே
இன்று எங்களுக்கு
நம்பகமில்லாத நிலையே!

இனி!
கதவை திறக்கப் போவதில்லை காடு,
கல்லை கீழே போடப்போவதில்லை நாடு
இதற்கிடையில் எங்கு எனது வீடு



இனி நாங்கள் ,
அடுக்குமாடி குடியிருப்புகளுக்காக
அகற்றப்பட்ட ஆதிகுடிகள்
போல் எங்களின் முகவரி இழக்கலாம்!

வரும் நீர் தடுக்கப்பட்டு
வறட்சியாக்கப்பட்ட குளம் போல்
எங்களின் இனம் சுருங்கலாம்!

இல்லை
திருவிழா முடிந்ததும் தெருவில் வீசப்பட்ட
குலதெய்வ கற்களாக,
நாங்கள் மீண்டும் தேடப்படலாம்!

மனிதர்களே !
இறுதியாக ஒரு உதவி!
உங்களுடன் பட்டை அணிந்து
நடைப்பயிற்சி வரும்
பெடிகிரி நாய்களிடம்
நாங்கள் சொன்னதாக
தெரிவித்து விடுங்கள்,

மனிதர்கள் ஜாக்கிரதை !
மனிதர்கள் ஜாக்கிரதை!



சுபத்ரா திவாகரன்

# பூவின் மதிப்பு



சின்னஞ்சிறு பூவிது
சிங்காரமாய் சிரித்தது
செல்வமகளாய் பிறந்தது வீட்டில்
செல்லமாய் வளர்ந்தது

கண்ணில் காணுமெல்லாம்
கையில் வந்தது
மாலையில் மொட்டாகி
காலையில் மலரும்
மலர்களின் சரமோ
மங்கையிவள் கரமோ
தொட்டு மகிழ்ந்து
தொங்கவிட்டு சென்றது

முன்புறக் கூந்தலில்
முழுநீளம் ஆடியது
அன்ன நடையில்
சின்ன இடையில் அழகாய்

அவளுக்கோ அதன்மேல்
அத்தனைப் பிரியம்
மணமாகிய போது
மணமான மல்லிகைதன்

மனதை மயக்கவே
மாமனைக் கேட்டாள்
காலையில் மலர்ந்து
மாலையில் மடியும்

பூக்களின் விலையோ
பொன்விலை தானடி
ஏக்கமும் இதற்கு
இத்தனையேனடி என்றான்

பூக்களைச் சூடிட
பூவைக்கு ஆசையோ ஆசை
கட்டியக் கணவன்
காட்டிற்குப் போனபின்

பூக்களின் மதிப்பு
குறைந்தாலென்ன கூடினாலென்ன
கூந்தலில் சூடிட
கூட்டமும் விடுமோ

பூவையின் மதிப்போ
பூமகனே உனது
ஊனுடல் உயிரில்
உண்மையில் உள்ளதடா !!

கவி நிலவு சுமதி சிவக்குமார்.

# "ஆர்வம் என்னும் உந்து சக்தி...!"

உலகில் எவராலும் செய்ய முடியாது என்று கைவிட்ட செயல்களை சிலர் நிறைவேற்றி காட்டியது, அவர்கள் அந்த செயலின் மீது உள்ள தணியாத "ஆர்வம்"தான்...

எடுத்த செயலில் ஒருவனிடம் "ஆர்வம்" இருந்து விட்டால், ஒவ்வொரு நாளும் அவனது குறிக்கோளை நெருங்கிக் கொண்டிருப்பான் என்பது திண்ணம்...

வாழ்வின் வெற்றி என்பது, ஒருவரின் செயலில் காட்டும் முயற்சி மட்டும் போதாது. அதன் மீது மிகுந்த ஆர்வத்தை பொறுத்தது...

பிரிட்டன் பிரதமர் பெஞ்சமின் டிஸ்ரெலி ஒரு நாவல் ஆசிரியரும்கூட. அவர் அறுபத்தேழு நாவல்களை எழுதியுள்ளார்...

ஒருமுறை செய்தியாளர்கள் அவரிடம்,'' எழுத்தில் உங்களுக்கு இவ்வளவு ஆர்வம் எப்படி ஏற்பட்டது...? என்று வினவினார்கள்...

அதற்கு அவர் கூறியதாவது... ''எனக்கு படிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. படிப்பதற்கு புத்தகம் ஏதும் கிடைக்காவிட்டால் அதற்க்காவே நானே நாவல் எழுதிப் படிக்க ஆரம்பித்து விடுவேன். அப்படியே எழுதி எழுதி எழுத்தாளராகி விட்டேன் என்றார் பெஞ்சமின் டிஸ்ரெலி...





குருதியில் உறுதியும், நெருப்பும் கொண்டு, சிந்தனை வேகமும் ஆர்வமுள்ள மனிதர்கள்தான் உலக ஓட்டத்திற்கு காரணமாக இருக்கின்றார்கள்...

அரை மனமுள்ளவர்கள், குறிக்கோள் அற்றவர்கள் வாழ்க்கையென்னும் கடலிலே அடித்து செல்லப்பட்டு அவதிக்குள்ளாகிறார்கள்...

புவி அச்சிலிருந்து வெளியேறி வளிமண்டலம் செல்ல ஒரு ஏவூர்திக்கு அதிக 'உந்துசக்தி' தேவைப்படுகிறது, அதிக 'உந்துசக்தி' இருந்தால் மட்டுமே ஏவூர்தி தனது இலக்கை அடைய முடியும்...! (ஏவூர்தி ராக்கெட்)

அதுபோலத்தான்!, ஒரு செயலை தொடங்குகையில் நம் மனதிற்கு அபாரமான உந்துசக்தி தேவைப் படுகிறது , அது இல்லாமல்தான், நம்மில் பலரும் முதல் நிலையிலேயே இருந்து விடுகிறோம்...!!

அந்த ஆரம்ப உந்துசக்தி கிடைத்து, ஒரு செயலை நாம் தொடங்கிவிட்டால்,எதிரே என்ன தடை வந்தாலும் நொறுக்குவதற்கு நம்மால் முடியும். எந்த செயலிலும் ஆர்வம் என்னும் உந்துசக்தி இருந்தால் வெற்றி உங்களைத் தேடி வரும்...!!!

ஜெகதீஸ்வரி

# தொலைந்தது சாவி

– ஆர்.எழில்ஆளவந்தார்

ஒரு திருமண விருந்து முடிந்து கார் நிறுத்துமிடம் வந்ததும் என் கணவர் சத்தமிட ஆரம்பித்தார். எங்கே போயிற்று சாவி என கண்ணை உருட்டி, கீழே தேடி மறுடி பேண்ட் பையை துழாவினார். அப்போது நல்ல ஒரு விருந்து சாப்பாடு சாப்பிட்டப்பின் கொளுத்துகிற வெயிலில் எப்போது வீட்டிற்கு போவோம் என ஆவலுடன் நானும் என் தோழியும் (உடன் வந்திருந்தார்) என் கணவரை அணுகி என்ன சாவி? என்றதும் கார் சாவியைத் தான் கேட்கிறேன். லாக்கர் சாவியை தேடுவேன் என கோபித்தார். சற்று நேரம் போனதும் பரிதாபமாக என் பேண்ட்டில் ஒரு நட்டை இருக்கிறது என மன்னிப்பு கேட்கும் தொனியில் கூறினார். நான் உடனே அதை அப்போதே சரி செய்தேனே என சொல்ல, அவர் இது மற்ற பக்கத்திலுள்ள கை இது வேறு என சொல்லி ஒரு அடி எடுத்து வைத்ததும் அவர் மொபைல் போன் வேறு விழுந்து நான் மிதிக்காமல் தப்பித்தது.

புதிதாக பேண்ட் வாங்கக் கூடாதா என கேட்க எத்தனித்து இது சமயமல்ல என என் கோபத்தை எரிச்சலை அடக்கி கொண்டேன். சரி நாம் சாவியை தேடுவோம் என்று ஆரம்பித்த போது அது பெரிய ஒரு பார்க்கிங் அமைப்பு நகரத்தை விட்டு வெளியே மிக தூரத்தில் இருந்தது. இல்லாவிட்டால் வீட்டிற்கு போய் மறுசாவியை கொண்டு வரவும். இயலாது போயிற்று. கடவுளே என தெரிந்து கொண்டு தேடுதல் வேட்டையை தொடங்கினோம். சரி முதலிலிருந்து எப்படி இறங்கி எங்கே போனோம் நின்றோம். சாப்பிட்டோம் என யோசித்து அதன்படியே சென்று எல்லா டேபிள், நாற்காலிகள் பின்னால் பார்த்து, எல்லோரிடமும் கேட்டு, மணமக்கள் மேடைக்கு போய் அங்கும் மறுபடி தேடி அசட்டு சிரித்து மறுமுறை வாழ்த்திவிட்டு கீழே இறங்கினோம். ஒரு துப்பறியும் நிபுணர் ஷெர்லாக் ஹோம் கூட அப்படி தேடி இருக்கமாட்டார். என் கணவர் நான் தப்படி தப்படியாக வெளியில் தேடுகிறேன். நீயும் உன் தோழியும் உள்ளே மறுபடி பாருங்கள் என்றதும் அப்பாடா, வெளியே வெயில் வாட்டுகிறது. நாம் தப்பித்தோம் என உள்ளே சாப்பாட்டு மேஜை கீழே, கை கழுவுமிடம், சமையல்காரர்கள், பரிமாறுபவர்கள் கூட விடவில்லை. எல்லோரும் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு சார் ஏற்பாடு செய்வதாக திருமணம் அமைப்பாளர் கூறிக் கொண்டிருக்கையில் என் கணவரிடம் இருந்து போன் கால் சாவி கிடைத்து விட்டது. இங்கே தொலைத்து போன பொருள்கள் வைக்குமிடத்தில் யாரோ கொடுத்து போனார்களாம் என்று சொல்ல மகிழ்வுடன் இம்முயற்சி எல்லா கல்யாண மண்டபத்தில் இனிமேல் கட்டாயம் இருக்க வேண்டும் என யோசித்தேன். காரில் ஏறினதும் மறுபடி என் கணவர் ‘வீட்டு சாவி’ என அலாராம் மாதிரி அலறினார். நான் அலட்டிக் கொள்ளாமல் அது என் கைப்பையில் பத்திரமாக இருக்கிறது என மிதப்பாக சொன்னதும் அவர் இனி கார் சாவியும் நீயே பத்திரமாக உன் மாயப்பையில் வைத்துக் கொள் என்று முடிவானது. ஐநாசபை அதில் தேடுவது ஒரு தனிக்கலை.

அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று காரில் ஏறி ஏ.சி. போட்டு அப்பாடா என மூச்சு விட்டு வீடு சென்றோம்.



ஆர்.எழில்ஆளவந்தார்

# தையல் கலை அறிவோம்!

தொடர்-1

## ஆடைத் தொழிலில் அற்புதங்கள்!

வளர்ந்து வரும் நாகரீக தையல் வளற்சியால் பண்பாடு சிறக்கவும் சிலர் ஆடை உடுத்தும் அழகால் சீர்குலைக்கும் நிலையும் நிலவுகிறதை கண்ணுற நோக்குகின்றோம்.

பணம் படைத்தவர்கள் உடுத்தும் உடைக்கும் அதுவே நடுதர குடும்பத்தை சார்ந்தவர் உடுத்தும்போது அதன் மதிப்பு மாறுபடுகிறதை காண்கிறோம். அதிலும் சமுதாயத்தில் பரிதாபத்திற்குறிய நிலையும் நிலவுகிறது. காரணம் டைலர் கடைக்குச் சென்று அளவு எடுத்து மிக நேர்த்தியாகவும் உடல் அமைப்பிற்கு தகுந்தார்போல் பிடித்த வண்ணம் உடுத்துவது நிலவிய வரை பண்பாடு காப்பாற்றப்பட்டது. அதன் மாற்றம் வந்தற்கு காரணம் ஆயத்த ஆடைகளை அலங்கார ஸ்தாபனங்களை அனுகுவதால் ரெடிமேடு மோகம் தலைவிரித்தாடும் அவளநிலைதான்.

யாரோ ஒருவர் அளவு எடுத்து தாயாரிக்கும் உடையை அழகு நிறைந்ததை கண்டு அதிக விலை கொடுத்து வாங்கி உடுத்தி சம்மந்தமேஇல்லாதஉடலமைப்பை





வெளிக்காட்டி கொண்டு நாகரீகம் அனாகரீகமாக மாறிவருகிறது. பொதுவாக பெண்கள் உடையை ஆண்களே அதிகம் வடிவமைத்த காலம்.. அவர்கள் பார்வைக்காக பெண்கள் உடுத்தி செல்வதை காலம் உணர்த்திவிட்டது. அதன் மாற்றம் மீண்டும் துவங்கியுள்ளதை அறிவோம்.

அத்தனை துறைகளில் பெண்கள் சாதித்தாலும் தையல் கற்றுக்கொண்டு தனக்கு தகுந்தார் போல் உடை தைத்து தனக்குத்தானே அழகை மேம்படுத்தி கொள்ள பெண்கள் களம் இறங்கிவிட்டார்கள் என்றே சொல்லலாம். எனது தையல் அகாடிமியில் பெண்கள் வருகை அதிகரித்தும் தன் வாழ்வாதாரம் மேம்படவும்.. சொந்த காலில் நின்று சாதிப்போம் என்னும் சவால்களை கண்ணுற கண்டும் செவிகுளிற கேட்டும் அகமகிழ்கின்றேன். அசுரவேக வளற்சிக்கு தன்னை இணைத்துக்கொள்ள முக்கிய உந்திகளாக இலவச தையற் பயிற்சியும் இலவச இயந்திரங்கள் பல அமைப்பை சார்ந்தவர்களும் Skill training மூலம் பயணடைவதே முக்கிய காரணிகளாக அமையப்பெறுகிறது.

நவீனமுறையில் மாற்றம் ஏற்பட்டாலும் இன்றளவில் பிள்ளைகளைவிட பெற்றோகளே ஆடைகுறைப்பில் நாட்டம் செலுத்துவதை என்னவென்று சொல்வது. நாகரீகம் பண்பாடு என்பது விவேகத்துடன் முன்னேற்றத்தை சார்ந்ததாக இருக்கவேண்டுமே தவிர மேலை நாடுகளில் உடுத்தும் உடையை போல் நாமும் பின்பற்றுதலாக மாறிவிடக்கூடாது.

பண்பாடு உடையில் மகத்துவம் நிறைந்ததாக இருப்பதற்கு ஒவ்வொரு குடும்பதாரின் ஒட்டுமொத்த தீர்மானமாக தேர்வு இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டின் வீட்டின் மாற்றமும் தெருவில் மாற்றம் வரும் ஒவொரு தெருவின் மாற்றம் ஊர்.. பிறகு மாவட்டம் மாநிலம் என பண்பாட்டை பேணிக் காப்பதில் அனைவருக்கும் பங்கு உண்டு... மாற்றம் காண்போம் மகளிரே அதனால் ஏற்றம் கிடைக்கும் தையலே...

(தொடரும்)



பா.வெண்ணிலாபாலாஜி
தையல் கலை வல்லுநர்,
நெய்வேலி

# congratulation






Our Mugavari student, A.R.Swetha Deepthi (MF321), an architect by profession, has been invited as a guest speaker on "AI in digital marketing and content creation" at Guru Nanak College, Chennai. She works full-time at Dotand (Amar Architecture & Designs Pvt Ltd), Chennai, and simultaneously works as a freelancer in the fields of digital marketing and content creation. Her dream is to establish herself as an entrepreneur in the same field. Swetha Deepthi makes a conscious effort to be present in all Mugavari events.






All the Mugavari events have started with her divine invocation of prayer songs. Very creative by nature, she made her presence felt through her contributions in all the event decoration activities. Congrats Thangam! Gratitude is Life.

# வள்ளி கும்மி பாட்டு

## மேடையில் கலக்கும் தாயும் பெண்ணும்!



தமிழகத்தில் பிறந்தவர் யாருக்காவது திருவிழா என்றால் பிடிக்காமல் இருக்குமா என்ன?

எனக்கும் அப்படித்தான் திருவிழாக்களின் மீது பேரானந்தம்.

ஆற்றங்கரை தீர்த்தம், சொந்தங்கள் ஒன்று கூடுதல், தேர்கடை வீதி நாட்டுப்புற ஆட்டம் என்று ஏறாலம். அதில் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று பறை ஆட்டம். பறை இசைக்கலைஞர்கள் பறை இசைக்க இசைக்கேற்ப ஆடுவதில் மிக்க மகிழ்ச்சி .

ஏன் அதுவே எனது கலை ஆர்வத்திற்கு அடைப்படையாக கூட இருக்கலாம்.

வள்ளிக் கும்மி என்பது நாட்டுப்புறக்கலை. இதற்கான முறையான எழுதப்பட்ட புத்தகங்கள் கிடையாது. முன்னோர்கள் தன்னானே சொல்லிப்பாடி ஆட அதை கேட்டு உள்வாங்கி அதன் பொருளும், மையக்கருத்தும் மாறாமல் பாடுவதாகும்.

அப்படி கேட்டு உள்வாங்கிய வள்ளி முருகன் கதையை என் அறிவிற்கு எட்டியபடி நான் அறிய பிழையின்றி கற்றுக் கொடுத்து வருகிறேன். என்கிறார் வள்ளி கும்மிப்பாட்டு கலையை தன் மகளுடன் சேர்ந்து உலகம் முழுவதும் பரப்பி வருபவர்.

ஈரோடு மொடக்குறிச்சி சிரிகிரி வேலவா கலைக்குழு ஆசிரியர் அனுசுயா தரணிபதி M.Sc., M.Ed., (கணித துறை). என்கிற சாதனைப் பெண்மணி . தமிழ் நாட்டுப்புறக் கலைகளின் அழகை உலகளவில் பரப்புவதும், இன்றைய இளம் தலைமுறையினர் நாட்டுப்புறக்

கலைகளில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தோடு கலைப் பயிற்சிகளை எளிதில் அனுகக்கூடிய வகையில் வடிவமைத்து கற்றுத் தருகிறேன்.

தமிழகத்தில் நாட்டுப்புற கலைகளின் மரபு தொடர்ந்து வாழ வேண்டும், என்பதை முன்வைத்து வருங்கால தலைமுறைக்கு நாட்டுப்புற கலைகளை பரப்பும் எனது பயணத்தில் அந்த சிரகிரியான் துணைநிற்க வேண்டுகிறேன்.

வள்ளிக் கும்மிப் பாட்டைப் மற்றும் சிரகிரி வேலவா கலைக்குழுவை உலகரியச் செய்ய உறுதுணையாக இருப்பது எனது கலைக்குழு சொந்தங்கள் . அதிலும் மிக முக்கியமான ஒருவர் எனது மகள் சஷ்திகா தரணிபதி (6ஆம் வகுப்பு), சிரகிரி வேலவா கலைக்குழு இணை ஆசிரியர் .

அம்மா நீங்கள் பாட உறுதுணையாக நான் இருக்கிறேன் என்று சொல்லி எனக்காக தீபத்தின் திரிபோல் தன்னை உருக்கி ஒளிதருகிறாள். ஏறத்தால 50 நிகழ்ச்சிகளில் குறைந்த பட்சம் 4 மணி





நேரம் கிட்டத்தட்ட இந்த ஒரு வருடத்தில் 200 மணிநேரம் என்னுடன் இணைத்து தனி ஒரு குழந்தையாக இருந்து நிகழ்ச்சியைச் செய்துவருகிறாள்.

*இதை நான் பெருமையுடன், சொல்வேன் இதுவரை தமிழகத்தில் நான் அறிய எந்த ஒரு வள்ளிக்கும்மி குழுவும் நிகழ்ச்சி முழுவதையும் இது போன்ற ஒரு சிறு குழந்தையை வைத்து செய்ததே இல்லை.

இது எங்கள் கலைக்குழுவின் சிறப்பம்சமாகும்.*வள்ளி கும்மி பாட்டை உலகறிய எடுத்துச் செல்லும் திருமதி அனுசுயா தரணிபதி மற்றும் அவரது மகள் சஷ்திகா தரணிபதி ஆகியோர் எடுக்கும் முயற்சி யாவும் வெற்றி பெற பெண் உலகம் சார்பில் வாழ்த்துகிறோம்.

**- தகவல்**
**தொகுப்பு:**
**பா.வெண்ணிலா பாலாஜி**
**நெய்வேலி**

# பாட்டும் பரதமும்

பாரத பண்பாட்டின் அடையாளமாக பரதநாட்டி யமும் மேடை கச்சேரியையும் குறிப்பிடுவார்கள். இந்த இரண்டையும் மேடைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் அரங்குகளிலும் நிகழ்த்தி காட்டி இந்தியாவில் பெருமை சேர்ப்பவர்கள் பெண்கள். அவர்கள் வெளிநாட்டில் இருந்தாலும் அந்தப் பணியை செய்கிறார்கள். செப்டம்பர் 7ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் உள்ள

Global Arts Temple USA, Viswa Kala mandir cultural Temple of music dance ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியில் பாட்டும் பரதமும் இடம்பெற்றது.

இதில் shriya காற்றினிலே வரும் கீதம் என்ற எம்.எஸ். சுப்புலட்சுமி பாடலை பாடினார். இதன் சிறப்பு விருந்தினராக இதே பாடல் பின்னால் 2005 இல் ஒரு நாள் ஒரு கனவு என்ற படத்தில் இடம்பெற்றது இளையராஜா இசையில் வெளியான அந்த பாடலில் இசைக்குழுவில் இருந்த





ஒருவர் இங்கு சிறப்பு விருந்தினராக பங்கு பெற்றார். பாடி முடித்ததும் அவர் பாராட்டு தெரிவித்தது மகிழ்ச்சியாக இருந்தது. அதைத்தொடர்ந்து பிள்ளைகள் நடனம் ஆடினர். பெண் குழந்தைகள் பரதநாட்டியம் ஆடினார்கள் அதே நேரத்தில் ஒரு சிறுவன் சமீபத்தில் வெளியான ரஜினி படத்தில் வந்த ஒரு பாடல் மோனிகா மோனிகா என்ற பாட்டுக்கு நடனம் ஆடினார். அந்த நிகழ்ச்சியை அவருடைய அம்மாவா என்று தெரியவில்லை. எனக்கு முன்னால் அமர்ந்து படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

*"குழல் இனிது யாழ் இனிது என்பர்* தம் மக்கள் மழலைச் சொல் கேளாதோர்" என்ற குறளுக்கு பொருள் கண்டேன்.

அதை மெய்ப்பிக்கும் விதமாக தங்களுடைய பிள்ளைகள் நடனம் ஆடும் போது அந்த பெற்றோர்கள் கண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 October 2025
Supplementary to MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027





தங்கள் பிள்ளை மேடையில் ஆடுவதை தான் ரசிப்பதை விட மற்றவர்கள் குறிப்பாக தன்னை சுற்றி இருப்பவர்கள் மகிழ்ச்சியோடு பார்த்து கைதட்டும் போது மகிழ்ச்சியாக இருக்கும். நிகழ்ச்சியில் முடிவில் யாராவது அருகாமையில் வந்து உங்கள் பெண் நன்றாக பாடினார் உங்கள் பையன் நன்றாக ஆடினான் என்று சொல்லும் போது பெற்றோர்கள் அடைகின்ற மகிழ்ச்சியை வார்த்தையில் வர்ணிக்க முடியாது.

நடத்தப்பட்ட இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா 28.09.2025 அன்று நடந்தது. எனது மகள் shriya 15 வயது முதல் 20 வயதுக்குள் நடைபெற்ற பாட்டுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றார் என்பது பெருமைக்குரிய விஷயம்.

எப்படி ஆயினும் பாரத நாட்டு பண்பாட்டின் சின்னங்களான பாட்டு பரதம்



IMPL Grand Contests 2025
Arizona Edition

| Film Music - Raga Based Songs - Instrumental - Junior 8-11 | |
|---|---|
| Third | Shanvitha Burri |

| Film Music - Raga Based Songs - Instrumental - Sub Senior 12-14 | |
|---|---|
| Second | Nihitha Burri |

| Film Music - Raga Based Songs - Vocal - Junior 8-11 | |
|---|---|
| First | Diya Nimmagadda |

| Film Music - Raga Based Songs - Vocal - Senior 15-20 | |
|---|---|
| Second | Shriya Senthil Kumaran |

இரண்டையும் பாதுகாக்கும் மிகப்பெரிய பொறுப்பை பெண்கள் பெற்றுள்ளார்கள். அதை சிறப்பாக அவர்கள் செய்கிறார்கள்

- செ.சுகன்யா